உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—௨௬.] விபவ௵ புரட்டாசி௴ [பகுதி—௧௧.

Vol. XXVI. *September-October-1928.* No. 11.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௬௪௯-ம் பக்கத்தொடர்ச்சி]

மாரீசன்வதைப்படலம்.

மாரீசனை இராமன் கொன்றதைக் கூறுவது.

இலங்கைக்குப்போன சூர்ப்பநகை இராவணனைக்காணச் செல்லல்.

[சூர்ப்பநகை, கான்முதலியோர் இறந்ததனாலேற்பட்ட சோகத்தை இராமன்மோகத்தால் மறந்து, சீதையின் அழகை இராவணனுக்கு எடுத்துக்கூறி மோகமூட்டி, அவன் அவளைக் கவாச்செய்து, அதனால் இராமனை எய்துதற் கிடையூறாயிருப்பவளை யொழிப்பதோடு தன்மான பங்கத்துக்கு எதிர் மானபங்கஞ்செய்வது மாமென்று இராவணனைக் காணச் சென்றாள். அப்போது, பிரபல வரபலத்தாலும் பெரிய புய பலத்தாலும் மூன்றுலகுக்கும் முதல்வனான இராவணன், விசுவகருமனால் அவனது அருமையான சிற்பத்திறமையனைத்தும் தெரியுமாறு செய்யப்பெற்ற அரசிருக்கைமண்டபத்திற் கொலுவிருக்கும் அமயமா யிருந்தது.

இராவணன் கொலுவிருக்கைவருணனை.

திரிமூர்த்திகளாலும் செயித்தற்கரிய திறலுடைமையால் யார்க்கும் வணங்காத எனிர்த்த மகுடவரிசைகள் மன்னர்களின் ஊடற்சாலத்து

அவர்கள் பிணக்கைத் தணித்து இணக்குதற்கும் வணக்கம்புரியாத அரியமகிமையுடையனவாய் வயங்கவும், இருபதுபுயங்களும் இருபது உதயகிரிகள்போல, அவைகளின்மேலாக ஈராறுசூரியர் இருபது கதிரவராய்த் துலங்கல்போல இருபது கர்னகுண்டலங்கள் இலங்கவும், இரத்தினகேயூரம் பூண்டு இருநிலந்தாங்கும் அந்த ஈரைந்திரட்டிப் புயவரிசைகள் நாகமணிகள் விளங்குகின்ற ஞாலஞ்சுமக்கின்ற ஆதி சேடனது படவரிசைகள்போலப் பயங்கரமாகப் பிறங்கவும், இலங்கையிற் சிறைப்பட்டிருந்த பலநிற ஒளி படைத்த நவக்கிரகவரிசைபோல நவரத்தினங்களா லமைந்த அரதனமாலை அணிந்த கரிய பெரிய மார்பு அந்த ஒன்பது கோள்களும் ஒருங்கு பிறங்கும் நீல விசும்புபோல விளங்கவும், இராக்கதராசாதி பல சாதி அரசர்கள் நெருங்கி வணங்கலால் அவர்கள் மணிமுடிகள் படியுந்தோறும் தேய்ந்து தேய்ந்து ஒலி செய்து வீரசுண்டைகள் விளங்கவும்,]

390. இன்னபோ திவ்வழி நோக்கு மென்பதை
உன்னலர், கரதலம் சுமந்த உச்சியர்,
மின் அவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்,
துன்னினர் மூறைமுறை துறையிற் சுற்றவே.

இ-ள். மின் (மினதுபிழம்புபோல) விளங்குகின்ற இரத்தின கிரீடம் தரித்த வித்தியாதரவேந்தர்கள் (இராவணன்) இன்ன சமயத்தில் இன்னபக்கத்தை நோக்குவானென்பதை யறியாராய் (நாம் பராமுகமாயிருக்கும் சமயத்தில் அவன் நாமிருக்கும் பக்கத்தைப் பார்க்கும்படி நேர, அந்தச் சமயத்தில் நாம் வணங்காதிருந்தால், நம் கதி யாதாம்! நம்தலை போய்விடுமே! என்று பயத்தால் எப்போதும் கும்பிட்டுக் கொண்டிருக்கும்) கைகளைச் சுமந்த தலையினராய் நெருங்கி (த் தாம் நிற்க வேண்டிய) வரிசைக்கிரமமாகச் சூழ்ந்து நிற்கவும்,

உன்னல்—நினைத்தல்; முன்பின் தொடர்ச்சியால் அறிதலை உணர்த்தியது. வழி—இடம். "விஞ்சை வேந்தர்—மாலிகாஞ்சனம்

முதலிய மாயவித்தைக்குத் தலைவர்; வித்யாதரர் என்ற வடமொழிப் பெயர்க்கும் பொருள் இதுவே." துன்னல்—கிட்டல்—சமீபித்தல். முறைமுறை—வரிசைக்கிரமமாக. துறை—(சபையின்) இடம்.

391. மங்கையர் திறத்தொரு மாற்றம் கூறினும்,
தங்களை யாமெனத் தாழும் சென்னியர்,
அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்,
சிங்கவ றெனத்திறற் சித்தர் சேரவே,

இ-ள். ஆண்சிங்கம்போல வலிமையுடைய சித்த (ராச)ர்கள், (இராவணன்) பெண்களைக் குறித்து ஒருவார்த்தை பேசினாலும் (அது) தங்களை (க்குறித்துப் பேசியது) என்று (அவன் எது சொன்னாலும் அதனை அவர்கள் தலைமேலேற்றுக்கொள்ளுதற் கடையாளமாகத் தலை வணங்கும் வழக்கத்தின் பலத்தால், அவர்கள் வணங்க எண்ணு முன்னமே, தாமாகவே) வணக்குந் தலைகளையுடையவர்களும் (அஞ்சலி காரணமாக) அங்கையும் (அச்சம் காரணமாக) அகமும் குவியப்பெற்ற உடம்புகளையுடையவர்களு மாகித் திரண்டு நிற்கவும்,

திறம் என்பதற்குக் காரணம், இடம் (தமிழ்ச்சொல்லகராதி) என்ற பொருள்களிருத்தலால், மங்கையர் திறத்து என்பதற்கு மங்கையர்காரண மாக வென்றும் மங்கையரிட மென்றும் பொருள் கொள்ளலாம். ஆம் அசை. ஏறு—சிங்கம் முதலிய சில மிருகங்களின் ஆண். திறல்—வலிமை. சேர்தல்—திரளல். அங்கைகுவிதல் கைகூப்பிக் கும்பிடலையும் உள்ளங் குவிதல் மனம் ஒடுங்கி அடங்குதலையும் நயம்படப் புலப்படுத்தும் வண்ணம் 'குவிதல்' என்ற பதம் சாதுரியமாகப் பிரயோகிக்கப்பட் டிருத்தல் கவனிக்கத்தக்கது.

[அமைச்சரிடம் அமைதியாக யாதேனு மொரு நன்மொழி கூறினு லும், அச்சமேலீட்டால் அது தங்களுக்கு அபாயம் விளைப்பதோர்

ஆணையோவெனப் பெரும்பயங் கிடந் தலைக்கப்பெற்ற நெஞ்சினராய்க் கின்னரமன்னவர் சென்னி இறைஞ்சித் தெண்டனிட்டு நிற்கவும், கால தண்டத்தைக் கையிலேந்திய நமனைக் கண்ட நாகவாசிகள் நடுங்கல் போல, நாகராசர் நடுங்கி வணங்கி நிற்கவும், திசையானைகளின் கொம்பை யொடித்த செயத்தையும் பசுபதியும் வசைமருவ வெள்ளிவெற்பெடுத்த விசயத்தையும் இசையோடிசைத்துப் பாடித் தும்புரு நாரதர் இனிய கானரசத்தை இருபதுகாதுகளிலும் வார்க்கவும், வருணதேவன் வாச நீரை அவைக்கணுள்ளார் ஆடை நனையாமல் அச்சத்தோடு சின்னஞ் சிறிய திவலைகளாகச் சிதறித் தெளிக்கவும், வாயுதேவன் நெருங்கி வணங்குகின்ற நிருபர் மணிமுடிகள் உரிஞ்சி உதிர்ந்த பொற்றாள் மணித்தூள் முதலிய எத்தூளும் தரையில் விழுமுன் தாங்கிக்கொண்டு போய் அப்புறப்படுத்தித் துப்புரவு செய்யவும், தடாகத்திலே தாமரை மலர்ந்தாற்போலச் சபாமண்டபமெங்கும் தீபமேற்றும் சேவையைத் தீக் கடவுள் செய்யவும், தேவாசுர ஆசாரியரான வியாழ வெள்ளிகள் சேவகர்க் குரிய நெடுஞ்சட்டைபூண்டு பொற்பிரம்பேந்தி இந்திராதிய இராசர் களுக்கு ஏற்பட்ட இருக்கைகளை அவரவர்க் களித்து உபசரித்திடும் பணியியற்றவும், காலக்கடவுள் காலதண்டம் பாசம் முதலிய ஆயுதங் களை அகற்றி, வெறுங்கையனாய்நின்று, தலைவணக்கத்தோடு வாய்பொத் திக் காலங்கழியுங் கணக்குக் கூறுஞ் சேவகஞ் செய்யவும், கற்பகத்தருவும் காமதேனுவும் சிந்தாமணியும் சங்கநிதி பதுமநிதிகளும் ஏற்பாருக்கு ஈய எண்ணிய எப்பொருள்களையும் கூறுமுன் குறிப்பறிந்து கொடுத் தற்குச் சித்தமாய் அடுத்துக் காத்திருக்கவும், கங்காதேவி முதலிய தீர்த்தகன்னியர் மங்கல அக்கதையும் வாசமலரும் தூவி மங்கள வாழ்த்துக்கூறவும், மேகத்தொனிகேட்டு ஆடும் மயில்கள்போல மேனகையாதிய வானகமாதர்கள், தாளத்தொனிக்கேற்ப நாடகமாடவும் இராவணன், காரிகையார் காதற்பார்வை அலைமோதப்பெற்று, இறு மாந்து கொலுவிருந்தான்.

கொலுவிருக்கும் இராவணன்சமுகத்தில் குறைபட்டமூக்கினளான சூர்ப்பநகை சேர்தல்.

வடக்கேயுள்ள தண்டகாரணியத்திலிருந்து தென்னிலங்கைக்கு வந்த சூர்ப்பநகை இராவணன் அரண்மனை வடதிசைவாயிலை யடைந்தாள். (செம்மேகம் கருமலை யுச்சிநின்று இறங்கி அம் மலைச்சரிவிற் பரவல்போலச் செம்பட்டைக்கூந்தல் தலையினின்று சரிந்து முதுகிற் புரள்வதற் கெதிரிடையாகச்) சிவந்த இரத்தவாரி மூக்கினினின்று வழிந்து மார்பிற் பரவ வந்தவளைக்கண்டு, இராவணேசுரனது ஆணையால் இலங்கையிலுள்ள விலங்குகளையும் துன்புறுத்துவாரில்லையே, திரிலோகாதிபன் தங்கை யென்று தெரிந்தும் இவ்வாறு செய்வாருளரோ, இலங்கேசன் தங்கையென்றறிந்தவுடன் தாயே யென்று தாள் பணிவாரன்றி எண்ணவு மொண்ணாத இச்செய்கையை இயற்றுவா ரெவருமிலர், இவள் தன்னையே தா னரிந்தாளாதல்வேண்டும், என்று தங்களுள்ளே நினைந்து இலங்கைமாந்தர்கள் கலங்கி அவள் காலில் விழுந்து கதறி யழுதார்கள். அவள், அமரேசனாதி அகில உலக அரச ரனைவரும் அடி வணங்க முடிபுனைந்து வரையறையற்ற வைபவத்துடன் குதுகலித்துக் கொலுவிருக்கும் இராவணனெதிரே காதறையும் மூக்கறையுமாய்க் கதறி யழுதுகொண்டு காலில் விழுந்தாள்.

(பூரண கிரகணதினமாய்த் தான் பூரணகலையுடன் பொலியும் பூரணையில் கலைகள் முழுதும் இழந்து கருமையுறும்படி கரும்பாம்பு வரக் கண்ட சந்திரன்போல,) இராவணன், உயர்வறஉயர்ந்தநிலை, எய்தும்படி, அங்க லிருக்கும் தற்சமயத்தில், இழிவறஇழிந்தநிலை எய்தும்படி, அங்கபங்கப்பட்ட தங்கை வரக் கண்டு கொடிய கோபங்கொள்ள, நெறிப்புண்டு புருவங்கள் நெற்றியிலேறச், செந்நெருப்புப்போலக் கண்கள் சிவக்கக் கண்ட தேவாதியர் திகிலுற்றுச் செய்வ தின்னதென்று தெரியாராய்த் திகைத்தார்கள். யாவரும் நடுங்கும் நமனும் நடுங்கினான். 'இன்று

நமக்கு இறுதிக்காலம் வந்தது' என்று எல்லாரும் பேச்சு மூச்சின்றிப் பிரமித்திருந்தார்கள்.

அப்போது இராவணன், படபடத்துப் பற்கடித்து வாய்மடித்து மீசைதுடிக்க மேகம் இடித்தாற்போல, "இது செய்தவர் யார்?" என்று சூர்ப்பநகையைக் கேட்டான். அவள், "காசினி ஆள்பவர்; காமனை நேர்பவர், பூமியி லுள்ளார் யாவரும் ஒவ்வார், கானிடை உறையும் மானுடர் இருவர்" என்றாள். எனவே, "மனிதராவது! இது செய்வதாவது!" என்று வெடிபடச் சிரித்து "மனிதர் வலிமை மிகவும் சிறிது, உண்மை உரைத்திலை; பொய் சொன்னாய்; நடந்ததை நடந்தபடி சொல்" என்றான். "மேனி அழகினால் வேளை நிகர்ப்பவர், தோளின் வலியினால் மேருவை அழிப்பவர், உலகம் ஏழையும் ஓர் இமைப் பொழுதில்—வில்லினால் வெல்லும் வல்லமை உள்ளவர், முனிவரை யன்றி எவரையும் வணங்கார், மரவுரி உடுத்தவர் சடைமுடி தரித்தவர், தூணி சுமந்த தோள்வலி மிக்கவர், உன்னை ஓர் பொருட்டா உன்னாதவர்கள், 'இராக்கதருக்கு யாங்கள் அஞ்சினேம்' என்று முனிவர்கூற 'அரக்கர் குலமனைத்தையும் வேரறக் கொன்றுவிடுவேம்' என்று அபய மளித்துச் சபதஞ் செய்துள்ளார்கள்"]

392\. "மாரர்உள ரேஇருவர் ஒருலகில் வாழ்வார்?
வீரர்உள ரேஅவரின் வில்லதனின் வல்லார்?
ஆர்ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள் ஐயா?
ஓரொருவ ரேஇறைவர் மூவரையும் ஒப்பார்!"

இ - ள். ("அழகு மிக்க அவர்களுக்கு மன்மதன் நேராவதற்கு, அவன் ஈசன்விழியால் எரிந்து உடலிழவாதிருந்திருக்கவேண்டும். அன்றி அவன் ஒருவனு யில்லாமல் இருவராயிருக்கவேண்டும். அவ்விருவரும் வெவ்வே றுலகத்தில் வாழாமல் ஒருலகத்தில் வாழ்வாரா

யிருத்தல்வேண்டும். அவ்வாறாக,) மன்மதர் இருவராய் (இருப்பதோடு) ஓர் உலகத்தில் வாழ்வாராய் இருக்கின்றார்களா? (இல்லை). வில்வித்தையில் அவர்களைக் காட்டிலும் வல்லவரான வீரர்கள் இருக்கின்றார்களா? (அதுவும் இல்லை). அப்படிப்பட்ட (சிறப்புடைய இரு) வர்களை நேர்வார் (இருவரில்லை யென்றேன் அவர்களை நேர்வார்) ஒருவர் (தான்) யார் (இருக்கின்றார்கள்) ஐயா! (சொல்வாய். உன்னாற் சொல்லமுடியாது. ஏனெனில், அவர்கள்) ஒவ்வொருவருமே (தனித்தனியாக, முதற்) கடவுளரான மும்மூர்த்தியரையும் (ஒருசேர) நிகர்வார் (என்க)."

மாரன் - மன்மதன். வில் - வில்வித்தைக்கு ஆகுபெயர். அன்னவர் - அப்படிப்பட்டவர்கள். சூர்ப்பநகை, தான் காதும் மூக்கும் களையப்பட்டு அவமானமடைந்த தாழ்நிலையிலிருந்தமை கருதி, மகோன்னத நிலையிலிருந்த தமயனை 'அண்ணா!' என விளித்தல் அடாதென 'ஐயா!' என விளித்தாளெனக்கொண்டால், ஐயா என்பது மரியாதை விளிப்பெயராம்; இராமலக்குமணரது அழகு வீரம் இரண்டிலும் ஈடுபட்டு அவசமுற்றதனால் தமயனிடம் பேசுகின்றோமென்பதை மறந்து வழக்கம்போல அண்ணா! என்னாளாய், ஐயா! என்றாளெனலுமாம்; அன்றித் தான் கூறுவதைக் கூர்ந்து கவனிக்கும்படிசெய்தற்காக வேண்டுமென்றே சாதாரணமான அண்ணா! என்னும் விளியை வழங்காமல் சாதுரியமாக ஐயா! என்னும் விளியை வழங்கினாளெனலுமாம். "தமையன் தந்தைக்கு ஒப்பானவன் என்பது நற்கொள்கையாதலால், ஐயா என விளித்தாள்" என்பது மூந்திய உரை. இறைவன் - கடவுள்; சிவன்; திருமால்; பிரமன் (தமிழகராதி). திரிமூர்த்திகளைத் தனித்தனியாகவும், சேர்த்தும் உணர்த்தும் 'இறைவர்' என்ற சொல்லை இங்கே பொருத்தமாக இனிதெடுத்தாண்டிருக்கும் நயம் பாராட்டத்தக்கது. ஏகாரம், முதலாவது வினா, இரண்டாவது - எதிர்மறை, மூன்றாவது பிரிநிலை. முதலிரண்டையும் இல்லையென்பதை உட்கொண்டு வினவிய எதிர்மறை

வினு எனலுமாம். மாரர் இருவர் ஓர் உலகில் வாழ்வார் உளரோ என்றும் அன்னவரை ஒப்பவர்கள் ஒருவர் ஆர் என்றும் கூட்டிப் பொருள் கூறப்பட்டது. ஒப்பவர்கள் என்பதில் கள் விகுதிமேல்விகுதி; அசையெனலுமாம் (சிந்தாமணி).

உருவ மன்மதன் ஒருவனும் இல்லை. அருவ மன்மதன் ஒருவனே உள்ளான். ஆதலால், மன்மதர் இருவரில்லையென்று சொல்லவும் வேண்டுமோ வென்பாள் மாரர் இருவர் உளரோ என்ருள்.

இராமலக்ஷுமணரது அழகின்சிறப்பை முதலடியிலும் அவர்களது போர்த்திறமைச்சிறப்பை இரண்டாமடியிலுங் கூறி, அவ்விருசிறப்புமுடைய அவர்களை ஒருசேர நிகர்வா ரொருவர் யார் என்னும் வினுவால் ஒருவருமில்லையென்பதை மூன்றும் அடியில் உணர்த்தி, அதனை வற்புறுத்துவாளாய்ச், சிறந்த அழகும் ஆற்றலும் சேர உடைய திரிமூர்த்திகளில் ஒருவர் நிகராரோவென்ருல், நிகரார்; அவர்கள் மூவருஞ்சேர்ந்து அவ்விருவருள் ஒருவரைத்தான் ஒப்பாரென்பார் 'ஓரொருவரே இறைவர் மூவரையும் ஒப்பார்' என நான்காம் அடியிற் கூறினுள்.

இது இனியகவிகளுட் சிறந்த கவிகளு ளொன்று.

(தொடரும்)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

நம்பியாண்டார் நம்பிகாலம்.

[௩௯௫-ஆம் பக்கத் தொடர்ச்சி]

இனி, திருமுறைகண்டபுராணத்திலே நம்பியாண்டார்நம்பி தேவாரத்திருமுறைகளை ஏழாகப் பகுத்ததுமாத்திரமல்லாமல், திருவாசகம், திருவிசைப்பா ஆதியவை, திருமந்திரம், பதினோராந்திருமுறைப் பிரபந்தங்கள் ஆகிய இவைகளையும் தொகுத்ததாகக்கூறியிருத்தலினால் இவர்காலம் ஆதித்தகரிகாலனது காலமாக இருக்கமுடியாதென்றும், திருவிசைப்பாக்காரருள், சிலர் அருண்மொழிவர்மனான இராஜராஜனுக்குப் பின்னும் இருந்தார்களாகலின் நம்பியாண்டார்நம்பிகள்காலமும் பின்னேயிருத்தல்வேண்டுமென்றும் சிலர் வாதிப்பர்.

இவர்கள், திருவிசைப்பாக்காரர் ஒன்பதின்மரில் ஒருவராகிய கருவூர்த்தேவர் தஞ்சை இராசராசேச்சுரத்தைப் பாடியிருத்தலினாலும், தஞ்சைப் பிருகதீச்சுரமான இராசராசேச்சுரத்தைக் கட்டிய இராஜராஜன்மகன் ராஜேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோளேச்சுரத்தைப் பாடியிருத்தலினாலும் இப்பாக்களும் திருமுறையிற் சேர்க்கப்பட்டிருத்தலினாலும், நம்பிகாலம் இராஜராஜன் ராஜேந்திரனாதிய அரசர்கட்குப் பின்னால் என்பது உறுதிபெறுகிறது என்பர். இவைகட்கு ஆதாரமாகவிருப்பனவை,

பண்புற்றதிருஞானசம்பந்தர்பதிகமுந்நூற்
றெண்பத்தினான்கினைவிலங்குதிருமுறைமூன்று
நண்புற்றநாவரசர்முந்நூற்றேழ்மூன்றினால்
வண்பெற்றமுறையொன்றுநூற்றினால்வன்றொண்டர், (25)

ஆகவளர்திருமுறையேழருட்டிருவாசகமொன்று
மோகமெறிதிருவிசைப்பாமாலைமுறையொன்றுசிவ
போகமிகுமந்திரமாமுறையொன்றுபுகழ்பெறவே
பாகமிகுந்திருமுறைகள்பத்தாகவைத்தார்கள். (26)

என்று திருமுறைகண்டபுராணத்திலே காணப்படும் செய்யுட்களாம். இவற்றை யடுத்துக் காணப்படுவன,

வைத்ததற்பினம்பிகழன்மன்னர்பிரான்மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதருமிறைமொழிந்ததிருமுகப்பாசுரமுதலா
வுய்த்தபதிகங்களையுமொருமுறையாச்செய்கவெனப்
பத்திதருந்திருமுறைகள்பதினொன்றாப்பண்ணினர். (27)

மந்திரங்களெழுகோடியாதலினான்மன்னுமவ
ரிந்தவகைதிருமுறைகளேழாகவெடுத்தமைத்துப்
பந்தமுறுமந்திரங்கள்பதினொன்றுமாதலினா
லந்தமுறைநான்கினொடுமுறைபதினொன்றாக்கினர். (28)

ஆக்கியபின்றிருத்தொண்டத்தொகையடைவையருளாலே
நோக்கியபின்னாயன்மார்நடங்கடைவுந்தொழிற்பேறும்
பாக்கியத்தாலிபழுகத்தோனருள்செய்தபகுதியினால்
வாக்கியல்சேரந்தாதிநம்பியடைவேவகுத்தார். (29)

என்ற 27, 28, 29 ஆம் செய்யுட்கள். 25, 26 ஆம் செய்யுட்களில் 'தேவாரத்திருமுறை எழு, திருவாசகம் ஒன்று, திருவிசைப்பாமாலை முறை ஒன்று, திருமந்திரம் ஒன்று ஆகப் பத்தாக வைத்தார்கள்' என்று காணப்படுகிறது. வைத்தவர் யாரென்று காணப்படவில்லை. உலகினர் என்று கொள்ளவேண்டும். இப் பன்மைவினைக்கு வேறு ஒருமை எழுவாய் கொள்வது இலக்கணவழுவாகும். ஆனால், இந்த 25, 26 ஆம் செய்யுட்கட்கு முன்னுள்ள 23, 24 ஆம் செய்யுட்களிலே அரசன் (இராசராச அபயகுலசேகரன்) திருமுறைகளை வகுத்ததாகக் காணப்படுகிறது. அவை வருமாறு:—

அந்தமொழிகேட்டலுமேமன்னன்றானு
மாடினன்பாடினனலக்கண்யாவுந்
தீர்ந்தனனமுதமுண்டான்போலநெஞ்சந்
தெளிந்தனம்பிதிருவடியிற்றாழ்ந்தான்
பந்தமுறுசிவனடியார்கொள்கவென்றுப்
பண்டாரந்திறந்துவிட்டான்பரிவுகூர்ந்தான்
இந்தவகைப்பெருங்களிகொள்மன்னன்றானு
மெழின்முறையைமுன்போலவகுக்கவெண்ணி. (23)

மன்னுதமிழ்விரகரெங்கள்காழிவேந்தர்
வகுத்தருளாலமைத்ததிருமுறையோர்மூன்று
மன்னவகைவாகீசர்முறையோர்மூன்று
மாரூராருரைத்ததிருமுறையதொன்றுந்
துன்னவகையேழாகத்தொகுத்துச்செய்தான்
றூயமனுவெழுகோடியென்பதுன்னித்
தன்னகரிறிருவருளாங்மன்னன்ன்றுனுந்
தாரணியோர்வீடுபெறுந்தன்மைசூழ்ந்தே. (24)

என்பவற்றால், இவ்வரசன் 'திருமுறை முன்போல வகுக்க எண்ணி, தூயமனு எழுகோடி யென்பது உன்னி ஏழாகத்தொகுத்துச் செய்தான்' என்று விளங்குகிறது. இவ்வாறு அரசன் செய்ததை உலகினரும் ஒப்புக்கொண்டனர் என்றால் அச்செய்தி ஒருவாறு பொருத்தமாக விருக்கும். அவ்வாறின்றி உலகினர் தொகுத்தனர் என்று கொள்ளும் படி 25, 26 ஆம் செய்யுள்கள் அமைந்திருக்கின்றன. 28ஆம் பாடலோ நம்பி இவ்வாறு வகுத்தாரென்று கூறுகிறது. இஃதன்றி அரசன் மந்திரங்கள் எழுகோடி என்பதைக்கொண்டு திருமுறைகளை ஏழாக வகுத்தானென்று திருமுறைகண்டபுராணமுடையார் 24ஆம் பாடலிற் கூறுகின்றனர். எழுகோடி மந்திரங்களாவன:—ஸ்வதா, ஸ்வாகா, நம:, வௌஷடு ஆதியவைகளை ஈற்றிலே யுடையன. இவைகளைத் தவிர வேறு ஈற்றினை யுடைய மந்திரங்கள் இல்லை. ஆயினும், 28ஆம் செய்யுளிலே 'பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால், அந்தமுறை நான்கினொடு முறை பதினொன் றாக்கினார்' என்று காணப்படுகிறது. பதினொரு மந்திரங்களைச் சங்கிதாமந்திரங்கள் என்பர் சைவர். அவை பஞ்சப்பிரமமும் ஷடங்கமுமாம். இவற்றில் எழுகோடிமந்திரங்களும் வருவதில்லை. ஆகவே இப் பதினொருமந்திரமும் எழுமந்திரமும் ஒன்றென்றுவது ஒரு வகைப்பட்டனவென்றுவது கூறுவதற்கில்லை. இவ்வாறு பலவித முரண்பாடுகள் பொருள்வகையிற் காணப்படுகின்றன. இனி, இலக்கணமுறைப் படி யாராய்வோம்.

i. 24ஆம் பாட்டிலே, அரசன் திருமுறைகளை ஏழாகத் 'தொகுத்துச் செய்தான்' என்று காணப்படுகிறது. 'தொகுத்துச்செய்தான்' என்பது செயப்படுபொருள் குன்றாத ஒரு முற்றுவினை.

இம் முற்றுவினையையுடைய செய்யுள் அப்படியே முடிந்து விடுகிறது. அடுத்த 25ஆம் பாட்டில் 24ஆம் செய்யுளிலே கூறிய பொருளே கூறப்படுகிறது. இது கூறியதுகூறல் என்னும் குற்றத்தின்பாற்படும்.

ii. இராசராசமன்னன், தன்பால் வந்த அன்பர்கள் தேவாரத்திரு முறையாசிரியர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் அருளிச் செய்த பதிகங்களுள் ஒன்றொன்று பண்ணிசையோடு ஓதக் கேட்டு, அன்பால் மனங்கரைந்துருகி மற்றைய பதிகங்களையும் தேடிக்கொண்டிருந்தான். அவை கிடைக்கவில்லை. ஆதலினால் இந்த உபாயத்தைத் தேர்ந்தான். ஆகவே அரசனுக்குத் தேவாரத்தைத் தேடுவதும் தொகுப்பதுமே நோக்கம் என்பது பாக்களிலிருந்தும் விளங்குகிறது. அவ்வாறு இருத்தலின் திருவாசகம், திருவிசைப்பா, திருமந்திரம் ஆதியவற்றைத் தொகுக்கப் பார்த்திருந்தான் என்றாவது வேண்டினான் என்றாவது கூறுவது 'மற்றொன்றுவிரித்தல்' ஆகும்.

iii. அரசன் இவ்வாறு திருமுறைகளைத் தொகுத்தபின், அத்திரு முறைகளை யாராய்ந்த நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டத் தொகைப்பதிகத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்து, பொல்லாப் பிள்ளையார் அருளாலே நாயன்மாருடைய அடைவெல்லாம் அந்தாதித்தொடையாக ஒரு நூல் செய்தார் என்று கொள்வது பொருட்டொடர்பும் செய்யுட்டொடர்புமுடையதாகவிருக்கிறது.

iv. நம்பியாண்டார்நம்பி சம்பந்தமூர்த்திசுவாமிகள்பேரில் அந்தாதி யொன்றே பாடியதாகக் கூறுகின்றார்.

v. பதினோராந்திருமுறையில் இறைமொழிந்த திருமுகப்பாசுரம் முதலாக நம்பி செய்ததாககூறப்படும் பதினொருநூல்களும் காணப்படுகின்றன. நம்பியின் ஆற்றலை உணராதவர் அக்காலத்து இரார் என்று துணிந்து கூறலாம். அவரைப் பழித்துரைப்போரும் இருப்பது அரிது. ஆகவே, அவர் 'தோன்றாத் தோற்றித் துறைபல முடிப்பினும், தான் தற்புகழ்தல் தகுதியன்று' என் பதை உணராது தம் நூல்களையும் பதினோராந்திருமுறையிற் கோத்தனர் என்று கூறுவது ஒரு பெரும்பிழையெனலாகும்.

ஆகவே, இவைகளான் 25 முதல் 28 வரையுள்ள பாக்கள் திருமுறை கண்டபுராணமுடையாரான உமாபதிசிவம்வாக்கல்லவென்றுகூறவேண்டியிருக்கிறது. பாக்களை ஊன்றிப்பார்த்தாலும் சந்தானசாரியசுவாமிகள் வாக்குப்போலத் தோற்றவில்லை. இவைகளாலே பல புராணங்களிலும் தம் செய்யுட்களை இடைமடுக்கும் புலவரொருவர் இவற்றைப் புகுத்திவிட்டதாகவேகாண்கிறது. இவ் விடைச்செருகற்பாக்களை நூலிலிருந்து களைவோமாயின் இவ்விடையூறு நீங்குகிறது. ஆகவே, முன்கூறியபடி நம்பியாண்டார்நம்பிகாலம் அவரேகூறியவாறு ஆதித்தன் (கரிகாலன்) II காலம் என்பது உறுதிபெறும்.

திருவாரூர்ச் சோமசுந்தரதேசிகன்.

இராமநாதபுரம் ஸமஸ்தானம்

மஹாராஜராஜஸ்ரீ மாட்சிமைதங்கிய

ஸ்ரீராஜராஜேஸ்வரஸேதுபதிமஹாராஜா அவர்கள்

தேகவியோகமடைந்தமைக்காற்றது

மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் பாடிய

சரமகவிகள்.

சிறந்தகொடைமிகுந்தமுத்துராமலிங்கசேதுபதிச்செம்மலானோன்
அறந்தழையும்புகழுடம்புற்றிருக்கின்றானதையறியாவகிலமாந்தர்
இறந்தனனென்றாற்றுகின்றாரிதற்கியானாற்றுகின்றேனீதற்செய்கை
மறந்தவரேயிருந்தாலுமிறந்தாரென்றறியார்க்கென்வழுத்துவேனே. (1)

நென்முளைநெல்லாதல்போற்சேதுமுத்துராமலிங்கநிருபரேறு
தன்முளைதானாயிருக்கின்றானெனுமென்சொல்கல்லிற்றாக்குகின்ற
மென்முளைபோலாகவறியார்கொளார்பசுமரத்தில்விரைந்துதாக்கும்
வன்முளைபோலறிந்தார்கொள்வாரதுவேபோதுமெற்கிவ்வையமீதே. (2)

பக்லவன்மேல்கடலுறும்போதங்கியிடந்தன்கிரணம்பதித்துவைத்த
தகவெனமாசேதுமுத்துராமலிங்கமன்னவன்வான்சாருங்காற்றன்
மகனெனவந்தமர்நாகநாதமன்பாலரசுரிமைவைத்துச்சென்றான்
சகமுழுதுமவனிவனேயெனமகிழ்ந்துகொண்டாடத்தக்கவாறே. (3)

நங்குலமன்னவர்வளர்த்ததமிழ்மகளாதரவின்றிநலிந்தாளென்று
பொங்குபுகழுறுபாண்டித்துரைமதுரைச்சங்கத்தைப்புதுக்கிப்பின்ன
ரங்குவைத்தாதரித்தல்போற்சேதுமுத்துராமலிங்கவரசேநீகாத்
தெங்குமறைந்தாய்நாகநாதனையச்செய்கைசெய்யென்றிருத்திவைத்தே. ()

அந்தநாட்டமிழரசர்மூவரெனக்கேட்டறிந்தேமதுபோலாம
விந்தநாட்டமிழரசாகியநும்மூவரையுமெதிரேகண்டோம்
எந்தநாட்டினுமுயர்ந்தநம்பாண்டிநன்னாட்டிலினியெஞ்ஞான்றுஞ்
சந்தநாட்டியசெழுஞ்செந்தமிழணங்குதலைநிமிர்ந்துதழைக்குமாதோ. (5)

சிலபுலவரிருக்குமண்ணின்விண்சிறந்ததென்றேநீசென்றாயாங்குப்
பலபுலவரிருந்தாலுமொருவராயினுநின்னைப்பாடுவாரோ
இலமெனநின்பாலிரப்பாரியாவருளரிவையெலாமேன்மறந்தாய்
தலமதனிலுயர்சேதுகாக்குமுத்துராமலிங்கதமிழ்க்கோமானே. (6)

பாட்டருமையறிந்துகொடுப்பாரிலையென்றேபாட்டுப்பாடல்கைவிட்
டோட்டமுறுபுலவரெலாநீயறிந்தீயுஞ்செய்தியூரார்சொல்லக்
கேட்டணுகிநினைப்பாடிப்பிழைத்தனரிக்கியாதியினிறக்கிஞ்சித்தேனு
நாட்டமின்றியெங்கொளித்தாய்சேதுமுத்துராமலிங்கநங்கோமானே. (7)

பொய்ப்பொருட்குத்துணைவேண்டாஎழுமைக்கும்பயனாகப்புக்ககல்வி
மெய்ப்பொருட்குத்துணைவேண்டுமெனநினைந்திராகவையமேதக்கோனைக்
கைப்பொருவியருகில்வைத்துக்காத்தநீயவனையெங்ஙன்கரந்துசென்றா
யெப்பொருட்குமிறைவனடிபரவுமுத்துராமலிங்கவிறைவரேறே. (8)

கொங்கிருக்குந்துளவணிவோனுபேந்திரனாய்விண்ணரசிற்கொண்டபர்திப்
பங்கிருக்குமவனமிசமாதலினெற்கெனச்சேதுபதிநல்வேந்தே
யிங்கிருக்குந்தேவசாதிக்கிறைமைபூண்டதுபோலிணையொன்றில்லா
தங்கிருக்குந்தேவசாதிக்கிறைமைபூணவானடைந்தாய்கொல்லோ. (9)

தேவாதிதேவர்தொழுஞ்சேதுமுத்துராமலிங்கசிங்கமேநற்
பாவாணர்பாவவுங்கொண்டாடவுநீயில்லையெனப்பரிதபித்தே
யாவாவென்றலறுகின்றாரொருகாலானாலுநீயவர்பாக்கேட்க
வாவாவாதாமதியாமல்வாராயெனிலாங்குவாழ்வாய்நீயே. (10)

1928ஞு செப்டம்பர்மீ 17உ (விபவஞு புரட்டாசிமீ 2உ) காலை 9-15 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக ஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-௱-௱-ஸ்ரீ K. ராமையங்கார் அவர்கள் B.A., B.L.,
அக்கிராசனம் வகித்தவர்.
2. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியாரவர்கள், B.A., B.L.
3. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், B.A., B.L.
4. ,, ராவ்ஸாஹிப் M. மாணிக்கவாசகம்பிள்ளை அவர்கள், B.A., BL.
5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A , B.L., M.L.C.
இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் லேட் பிரசிடெண்டு ஸ்ரீமது பா. இராஜராஜேஸ்வர ஸேதுபதியாகிய மூத்துராமலிங்கஸேதுபதியவர்களின் அகாலமரணத்தினால், பொதுவாகவே தமிழுலகத்திற்கும் முக்கியமாக இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்கும் நேர்ந்த பெரும் நஷ்டத்தைக் குறித்து நிர்வாகஸபையார் அநுதாபமொழிகூறி ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கு ஒரு பிரதி இப்பொழுதுள்ள மாட்சிமைதங்கிய இராமநாதபுரம்ராஜா அவர்களுக்கு அனுப்பவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

II. ஸ்ரீமாந்: ராஜா M. தினகர் பகதூர் அவர்களை இச்சங்கத்தின் தற்கால அக்கிராசனாதிபதி (Temporary President) ஆக நியமிக்கவேணுமென்று மகா-௱-௱ ஸ்ரீ ராவ்ஸாஹிப் M. மாணிக்கவாசகம்பிள்ளை அவர்கள் பிரேரேபிக்க மகா-௱-௱-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் ஆமோதிக்க நிர்வாக சபையாரால் அங்கீகரிக்கலாயிற்று.

III. 1928ஞு ஜூலை, ஆகஸ்டு மாதங்களின் சங்கம் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

IV. இச்சங்கத்தின் அங்கத்தினராகிய ராவ்பகதூர் K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களின் மரணத்தினால் தமிழுக்கேற்பட்ட பெரும் நஷ்டத்தைக் குறித்து அநுதாபம் தெரிவித்து அதனை ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள்.

V. இச் சங்கக்கலாசாலை உபாத்தியாயர் நல்லசிவன்பிள்ளை சரீர அசௌக்கியத்தினால் பெற்றிருந்த ரஜாவை ஸ்பெஷல் கேஸாக, சம்பளத்தோடு கூடிய ரஜாவாகப் பாவிக்கும்படிக்கும் அக்காலத்திற்குச் சம்பளம் பிடிபட்டிருப்பதை அவருக்குக் கொடுக்கும்படிக்கும் தீர்மானிக்கலாயிற்று.

மதுரை, 17-9-1928. K. ராமையங்கார்,
அக்கிராசனம் வகித்தவர்.

உ

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1928ஸு மார்ச்சுமீ 3உ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணக்கர்களின்

அபிதானபத்திரம்.

பீ. ஏ., பரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர் ந்நெ.	ரிஜிஸ் டர் நெ.	
1	6	A. சிதம்பரநாதன், கெவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
2	4	G. வேணுகோபாலன், பிஷப்ஹீபர் காலேஜ், திருச்சி.
3	5	ம. சுப்பிரமணியன், கெவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்.

எப். ஏ., பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1	50	R. சின்னத்தம்பி நயினர், ஸ்ரீமீனாக்ஷிகாலேஜ், சிதம்பரம். (முதற்பரிசு ரூபா 40-பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2-வது வகுப்பு.

1	34	N. V. சுப்ரமண்யம், மூனிசிபல்காலேஜ், சேலம்.
2	28	A. P. ஸ்ரீநிவாசன் திருவடி, St. Xavier's College, பாளையங்கோட்டை.
3	29	R. S. சுப்பிரமணியன், ஷை ஷை

4	27	T. R. கிருஷ்ணன், ஸெண்ட்ஜான்காலேஜ், திருநெல்வேலி.
5	48	S. கணபதி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
6	16	R. சென்னப்பன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி
7	35	S. ஸ்ரீநிவாஸன், முனிசிபல்காலேஜ், சேலம்.
8	22	N. K ஸ்ரீநிவாஸன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
9	8	T. P. சுப்பராயன், ஸெண்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
10	31	Mrs. ராஜம் தங்கம்மாள் ஜோதிநாயகம் (பெண்), ஸாராடக்கர் காலேஜ், பாளையங்கோட்டை.
11	32	ஜெ. Lizzie(பெண்), மாதர்கலாசாலை, திருவனந்தபுரம்.
12	49	C. R. இராமையன், ஸ்ரீமீனாக்ஷிகாலேஜ், சிதம்பரம்.
13	51	N. அரங்கநாதன், ஷை ஷை
14	13	D. K. இராமகிருஷ்ணன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
15	23	P. இராமசுவாமி, ஸெண்ட்ஜான்காலேஜ், திருநெல்வேலி.
16	33	M. ராஜம்மாள், மாதர்கலாசாலை, திருவனந்தபுரம்.
17	15	M. சங்கரலிங்கம், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
18	39	A. ஜான் சத்தியநாதன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

மெற்றிக்குலேஷன்பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1	108	S. V. இலக்ஷ்மிநாராயணன், முனிசிபல்காலேஜ், சேலம்.
		[முதற்பரிசு ரு. 30 (வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாவும்.)]
2	112	K. ரங்கசாமி ஐயங்கார், முனிசிபல்காலேஜ், சேலம்.
		(இரண்டாவதுபரிசு ரூபா 25.)

2-வதுவகுப்பு.

1	265	S. V. ஆனந்தன், போர்டுஹைஸ்கூல், வந்தவாசி, N.A. Dt.

2	258	R. சுந்தரேசன், நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
3	113	A. M. பத்திரையசெட்டி, முனிசிபல்காலேஜ், சேலம்.
4	116	A. D. பீமராவ், ஷ ஷ
5	68	C. மீனாக்ஷிசுந்தரம், ராஜாஹைஸ்கூல், இராமநாதபுரம்.
6	111	V. ராமசாமி, முனிசிபல்காலேஜ், சேலம்.
7	187	S. நாகராஜன், ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.
8	308	M. ஐயாத்துரைராஜ், ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
9	183	N. வரதராஜன், ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.
10	70	T. V. ராஜகோபாலன், ராஜாஹைஸ்கூல், இராமநாதபுரம்.
11	263	R. முத்தையன், நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
12	179	R. அங்கப்பன், போர்டுஹைஸ்கூல், உரத்தநாடு.
13	385	K. P. சுப்பிரமணியன், போர்டுஹைஸ்கூல், நாங்குனேரி.
14	94	S. மரியகுசை, St. Xavier's College, பாளையங்கோட்டை.
15	186	P. அண்ணுச்சாமி, ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.
16	257	S. கிருஷ்ணஸாமி, நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
17	133	T. R. நரசிம்மன், முனிசிபல்ஹைஸ்கூல், கூடலூர் N. T.
18	180	N. ஜெயராமன், போர்டுஹைஸ்கூல், உரத்தநாடு.
19	67	R. சீதாராமன், ராஜாஹைஸ்கூல், இராமநாதபுரம்.
20	253	A. குப்புசாமி, நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
21	336	A. இராமஸ்வாமி, ஹைஸ்கூல், பத்தமடை.
22	97	N. தேவதாஸ், St. Xavier's College, பாளையங்கோட்டை.
23	178	J. B. ராமாநுஜலு, போர்டுஹைஸ்கூல், உரத்தநாடு.
24	323	N. ஞானமுத்து, க்ஷத்திரியவித்தியாசாலை, விருதுநகர்.
25	382	R. செல்லப்பெருமாள், போர்டுஹைஸ்கூல், நாங்குனேரி.

26	377	A. S. நடராஜன், ஸ்ரீபூமீசுவரசுவாமிஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம்.
27	307	V. அண்ணுமலை, ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
28	118	A. G. சௌந்தரராஜுலு, ஸெண்ட்மிக்கேல்ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
29	134	S. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர் N. T.
30	280	L. G. லூயிஸ் கொன்சால்வஸ், St. Xavier's High School, தூத்துக்குடி.
31	315	V. வெங்கிடசாமி, ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
32	69	S. சிதம்பரம், ராஜாஹைஸ்கூல், இராமநாதபுரம்.
33	100	T. K. சுப்பிரமணியன், St. Xavier's College, பாளையங்கோட்டை.
34	252	V. S. பஞ்சாபகேசன், நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
35	312	S. இராமகிருஷ்ணன், ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
36	80	S. M. நமசிவாயம், போர்டுஹைஸ்கூல், குளித்தலை.
37	255	K. V. ரெங்கசாமி, நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
38	261	A. மாணிக்கம், ஷை ஷை
39	317	T. சுப்பிரமணியன், ஹிந்துநாடார் விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி.
40	71	V. சுந்தரராமன், ராஜாஹைஸ்கூல், இராமநாதபுரம்.
41	237	M. G. ஸ்ரீநிவாஸராகவன், P. S. ஹைஸ்கூல், மயிலாப்பூர்.
42	170	V. சிதம்பரம், ஸெண்ட்பீடர்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
43	284	A. முத்தையா, St. Xavier's High School, தூத்துக்குடி.
44	119	A. சவரிமுத்து, ஸெண்ட்மிக்கேல்ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

45	310	N. P. S. S. நடராஜன், ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
46	102	A. சூரியன், St. Xavier's College, பாளையங்கோட்டை.
47	89	V. பரமசிவன், ஸெண்ட்ஜான்காலேஜ், திருநெல்வேலி.
48	173	T. V. சண்முகசுந்தரன், போர்டுஹைஸ்கூல், உரத்தநாடு.
49	283	T. தேவதாசன்வாஸ், St. Xavier's High School, தூத்துக்குடி.

M. Dinakara,
அக்கிராஸநாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்,
27—9—'28.

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் பிரபவஹூ பங்குனிமீ 21, 22, 23
(1928-ஹூ ஏப்ரல்மீ 2, 3, 4)-ஆம் தேதிகளில் நடத்திய
தனித்தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப்
பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணக்கர்களின்

அபிதானபத்திரம்.

பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர்ந்தெண்.	ரிஜிஸ்டர்ண்.	
1	17	அருணாசலம், சன்மார்க்கசபை மாணவர், மேலச்சிவபுரி, மணப்பாறை வழி.
2	18	ம. பெரியசாமிப்பிள்ளை. குசமேட்டுத்தெரு, மேலச்சிந்தாமணி, தெப்பக்குளம்போஸ்டு திருச்சிராபள்ளி.

பிரவேசபரீக்ஷை.

1-வது வகுப்பு.

1 29 ஜெ. நாராயணசுந்தரம், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
(முதற்பரிசு ரூபா 50-பெறத்தக்க தங்கப்பதக்கம்).

2-வது வகுப்பு.

1 32 S. வேலுத்தாயம்மாள், கெவர்ன்மெண்ட் பெண்பாடசாலை, அந்திக்கடைப்பொட்டல், மதுரை.

2 34 ப. முத்தையா, மாணவர், கணேசர் செந்தமிழ்க்கலாசாலை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை ஸ்டேட்.

3 42 K. சீதாராம், கடவூர்போஸ்டு, மணப்பாறைவழி.

4 73 களம்பூர்-சு. சண்முகதேசிகர், உதவி ஆசிரியர், போர்டு கிளைப்பாடசாலை, திருவத்திபுரம், செய்யாறுதாலூகா.

5 31 N. கிருஷ்ணஸாமி ஐயர், No. 6. காமாக்ஷிபுர அக்ரஹாரம், மதுரை.

M. Dinakara,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்,
27—9—'28.

மதிப்புரை.

இளைஞர் தமிழ்க்கையகராதி:—இவ்வகராதி சென்னை லூத்தரன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையவர்களால் தொகுக்கப்பெற்றது. இதற்குமுன் வெளிவந்துள்ள விரிவான மற்றைத் தமிழகராதியின் துணைகொண்டு, வினைவிகற்பங்களைவிடுத்துப் பெயர்ச்சொற்களுக்கே பெரும்பாலும் பொருளெழுதி, ஆசிரியரவர்கள் இதனைச் சுருக்கியமைத்திருப்பதாகத் தெரிகிறது. இப்புத்தகம் அழகான சிறுவடிவத்தில் அமைந்திருத்தலோடு, குறைந்தவிலைக்குக் கொள்ளக்கிடைப்பதால் மாணவர்களாற் பெரிதும் விரும்பத்தக்கதே. இதன்விலை அணா 14. வேண்டுவோர்,—'இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட், சென்னை' என்ற விலாசத்திற் பெறலாம்.

திருக்கண்ணபிரானுர்:—இது மேற்கண்ட ஸ்ரீமான் வேணுகோபாலப்பிள்ளையவர்களாலேயே எழுதப்பட்டது ; பாகவதம், பாரதம் இவற்றைத்தழுவிக் கண்ணபிரான்சரிதையைச் சுருக்கமாக உரைப்பது ; ஆங்கிலகலாசாலைகளில் உபபாடமாகக் குறிப்பிடத்தகுந்தது. விலை, அணு 10. இதனையும் மேற்குறித்த இடத்தே பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன்:—இதுவும் ஷை பிள்ளையவர்கள் எழுதியதே. வசனநடை இனிமையும் எளிமையும் உடையது. விலை அணு 6. விலாசம்,—பி. ஜி. பால் அண்டு கம்பெனி, புஸ்தகவியாபாரிகள், ஜார்ஜ் டவுன், சென்னை.

விசித்திரவிளக்கு:—இது அரபிக்கதைகளில் ஒன்ருன அலாதீன் சரித்திரத்தைத் தமிழ்நடையில் எழுதியுள்ளதொரு சிறு புத்தகம். இதுவும் ஷை பிள்ளையவர்களாலேயே இயற்றப்பெற்றது. மிகச் சிறிய வாக்கியங்களாற் பிழையின்றி எழுதப்பட்டிருப்பதால் இது பள்ளியிற் பயிலும் கீழ்த்தர மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படத்தக்கது. விலை அணு 6. கிடைக்குமிடம்,—'எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி' நுங்கம்பாக்கம், சென்னை.

ஒட்டக்கூத்தர்:—இது கோயமுத்தூர் ஸ்ரீமாந் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் தொகுத்தது. கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரது வரலாறு இதிற் பற்பல மேற்கோள்களுடன் ஆராய்ச்சிமுறையில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. கன்னபரம்பரையாக வழங்கும் கற்பனைக் கதைகள் சிலவற்றை இவ்வாராய்ச்சி ஒருவாறு கண்டித்திருக்கிறது. இதன் விலை ரூபா. 1. வேண்டுவோர், மதுரை புஸ்தகவியாபாரம், மகா-ா-ா-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனுரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தானியமணி:—ருஷியதேசத்துப் பேராசிரியர் டால்ஸ்டாய் என்பவர் எழுதிய ஓர் அழகிய சிறுகதையின் தமிழ்மொழிபெயர்ப்பு இது. சிறுவர்கட்கும் பொருள்விளங்கும்படி, இதனை மொழிபெயர்த்த ஸ்ரீமாந் அ. சுப்பிரமணிய ஐயரவர்கள், மிகத் தெளிவாக எழுதியுள்ளார்கள். இச் சிறுபுத்தகத்தில் அருமையானநீதிகள் பல அறிஞர்கட்கும் புலப்படக்காணலாம். விலை $\frac{1}{2}$ அணு. அ. சுப்பிரமணியம் அவர்கள், ஸமரஸநிலைய புத்தகசாலை, திருமங்கலம் என்ற விலாசத்திற் பெறலாம்.

மருத்துவன்:—இஃதொரு புதிய மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. பண்டிட் ' எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் இதன் பத்திராதிபரர்வர். தமிழ்வைத்தியமுறைகளைப் பரவச்செய்தலும் மருத்துவகுல முன்னேற்றத்துக்கு உழைத்தலும் இதன் முக்கியநோக்கங்களென்று தெரிகிறது. வருடச்சந்தா ரூபா. 3. தனிப்பிரதி அணா 4: விலாசம்—மருத்துவன்காரியாலயம், 221, தங்கசாலைவீதி, சென்னை.

விடுதலை:—இப்பெயர்கொண்ட வாரப்பத்திரிகை ஒன்று இப்பொழுது புதிதாக வெளிவந்துள்ளது. திரு. பி. சுப்பிரமணியம் என்பார் இதன் ஆசிரியரென்றும், தேசீயவிஷயங்களும் பிறவும் இதில் எழுதிவரப்பெறும் என்றும் தெரிகிறது. இதன் வருடச்சந்தா ரூ. 4; ஆறுமாதத்திற்கு ரூபா 2—1—0 வேண்டுவோர் மகா-௱-௱-ஸ்ரீ N. ராமசுவாமி ஐயரவர்கள், 30, ஆதிமூலம்பிள்ளை தெரு, மதுரை: என்ற விலாசத்திற் பெறுக.

தமிழ்ப்பேரகராதி:—சென்னைச் சருவகலாசங்கப்பிரசுரமாகிய இவ்வகராதியின் மூன்றாம்தொகுதியின் மூன்றாம்பகுதி இப்பொழுது வெளிவந்திருக்கிறது. இதில், 'சில்லான்' என்பது முதல் 'செயித்தல்' என்பதிறுதியாகவுள்ள வார்த்தைகளுக்குப் பொருளெழுதப்பட்டுள்ளது. வழக்கம்போலவே இவ்வகராதிவேலை ஒழுங்காக நடைபெற்றுவருதல் மிகுந்த திருப்தியளிக்கின்றது. இப்பகுதியின்விலை ரூ. 2. வேண்டுவோர்—'The Madras Law Journal office, Post Box 604, Mylapore Madras' என்ற விலாசத்திற் பெறலாம்.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்:—இஃதோர் உரைநடைப்புத்தகம்; ஸ்ரீமாந். K. இராஜகோபாலன் அவர்களால் எழுதப்பெற்றது. இதில் நான்குகட்டுரைகள் அடங்கியுள்ளன. ஒவ்வொன்றும், முறையே, ரஸ்கின், எமர்ஸன், கார்லைல், டால்ஸ்டாய் என்னும் மேற்றிசைப்புலவர்களெழுதியிருப்பதன் மொழிபெயர்ப்பாகும். இதனால், அப்பேரறிஞர்களின் ஆழ்ந்த மனோபாவங்களைத் தமிழ்மக்களும் அறிந்து மகிழவேண்டுமென்பது ஆசிரியரவர்களின் கருத்து. இதன்விலை அணா ௮. வேண்டுவோர், எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, நுங்கம்பாக்கம் சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

உ

மானம் என்பதற்குக் குற்றமென்னும் பொருளுண்மை.

செந்தமிழ்த்தொகுதி ௨௯ பகுதி ௯-ல் வெளிப்போந்த தொல்காப்பியச் சொல்லதிகாரக்குறிப்பில் உள்ள ௧௧௧-வது சூத்திரக்குறிப்பைப் பார்த்தேன். அக்குறிப்பு வருமாறு.

"இச்சூத்திரத்தில் மானம் என்பதற்குக் குற்றம் என்று உரையாசிரியர்முதலியோர் பொருள்கொண்டனர். மானம் என்பதற்குப் பிரமாணம் என்று பொருளேயொழியக் குற்றமென்று பொருளிருப்பதாகத் தெரியவில்லை. ஹாநம என்ற வடமொழியின் தற்பவமாகிய ஆனம் என்பதற்குக் குற்றமென்று பொருளாம். 'மெல்லெழுத்துமிகினுமானமில்லை' (தொல். எழுத். 341) என்னுமிடத்து மெல்லெழுத்துமிகினும் மானமில்லை என்று பிரித்துப் பொருள்கொண்ட அச்சிட்டோர் இங்கும் வானம் என்று ஏட்டிலிருந்ததை மானம் என்று திருத்தி அச்சிட்டாரோ என்று கருதவேண்டியதாக இருக்கிறது." என்பதாம்.

சூடாமணிநிகண்டு பண்புபற்றியபெயர்த்தொகுதி ௫௮-வது கவியில், "காசுமை தவறே மானங் கறைகுறை மிறை கழிப்பு" எனவருவது கொண்டும், ஷை நிகண்டு பதினொராவது ணகரவெதுகை ௨-வது கவியில் "மானமே யளவி லச்சை விமானமே பெருமை குற்றம்" என வருவது கொண்டும் மானம் என்பதற்குக் குற்றம் என்னும் பொருளுண்மையும் அச்சுப்பிரதி வழுவின்றென்பதும் துணியப்படும்.

இங்ஙனம்,

சொ. வேலுச்சாமிக்கவிராயர்,

தேவகோட்டை.

உ

பிர்கிருதிசாஸ்த்ரம்.

(PHYSICAL SCIENCE)

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்
ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A., எழுதியது)

பௌதிகம் (Physics).

IV. ஒலி (Sound).

[௪௩௪—ம் பக்கத் தொடர்ச்சி].

இதுகாறும் ஒலி உற்பத்தியாமிடத்தையும் அவ்விடத்தில் தப்பாது நிகழும் தனியிசைத்துடிப்பின் (Simple Harmonic Motion) குணாதிசயங்களையும் ஆராய்ந்தோம். இனி ஒலியானது அலைகளாகப் பொருளினூடே வியாபித்துச்செல்லும்வகைகளைக் கவனிப்போம்.

ஒலியினது உற்பத்திக்கு எப்படித் தனியிசைத்துடிப்புக்களை நிகழ்த்தவல்லதோர் வஸ்துவானது இன்றியமையாததோ அவ்வண்ணமே ஒலியை உற்பத்தியாகுமிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கனுப்ப இரண்டு இடங்களுக்குமிடையேயுள்ள வெளிப்பரப்பில் யாதானுமோர் *பொருள் வியாபித்திருத்தல் அவசியமானது. சுருங்கக்கூறின், ஒன்றுமல்லாத பாழ்வெளியினூடே (Vacuum) ஒலி செல்லுதற்கியலாது. இவ்விஷயத்தை ஒரு சிறு பரிசோதனையால் நிரூபணம் செய்யலாம்.



படம் 35.

படம் 35-ல் காட்டப்பட்ட கருவியமைப்பில் மின்சாரத்தினாலியங்கும் ஒரு மணியானது இரண்டு மெல்லிய மின்சாரக்கம்பிகளில் ஒரு கண்ணாடிக்கூண்டினுள்ளே (Bell-jar) தாங்கப்பெற்று நிற்கிறது. கூண்டு காற்று நிரம்பியிருக்கிறது. கு எனக் குறிக்கப்பட்ட குண்டானது மணியின்மீது மின்சாரசக்தியால், துடித்துத் தாக்கிக்கொண்டிருக்கிறது. மணியினோசை வெளியில் நன்றாகக் கேட்கிறது. வாயுப்பம்பு (Air-pump) என்னும் ஒரு கருவியுண்டு. அதனைக்கொண்டு ஒரு கூண்டினுள்ள வாயுவை வெளியேற்றி அக்கூண்டினது உள்ளிடத்தை ஒன்றுமில்லாத

* "பளுவுடன் இடத்தை நிரப்புவது பொருள்" என்பது பொருளினது இலக்கணம்.

பாழ்வெளி (Vacuum) ஆக்கலாம். இத்தகைய கருவியைக்கொண்டு கூண்டிலுள்ள வாயுவை வெளிப்படுத்துவோம். கூண்டிலுள்ள வாயுவானது குறையக் குறைய ஒலியானது வரவர மெலிந்துகொண்டே போகிறது. கடைசியாக, சத்தம் சிறிதும் வெளியே கேட்பதற்கியலாது போய்விடுகிறது. ஆனால், கூண்டிலுள்ள மணியோ முன்பு எவ்வளவு விசையுடன் இயங்கிக்கொண்டிருந்ததோ அவ்வளவு விசையுடன் இன்னமும் இயங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, ஒலி வெளியே செவிக்குப் புலனாகாத காரணம் ஒலியினது உற்பத்திஸ்தானமாகிய மணிக்கும் கேட்பவர் காதுக்கு மிடையே ஒரு பாழ்வெளி (Vacuum) இருப்பதேயாகும். வாயுவை மறுபடியும் கூண்டிற் புகும்படிசெய்தால் ஒலியானது ஆரம்பத்திலிருந்தவாறே தெளிவாக வெளியிற் கேட்கப்படுகிறது. ஆதலின், வெற்றுவெளியில் (Vacuum) ஒலி செல்லாதென்பதும் ஒலியினது செலவுக்குப் பொருள் இன்றியமையாததென்பதும் விளங்கும்.

மேற்கூறிய பரிசோதனையிற் கூண்டிலுள்ள வாயுவை அகற்றிய பின்னர் ஒலி மணியிலிருந்து மேற்செல்ல இயலாதுபோம். அத் தருவாயில், கூண்டிற்குள்ளே, வாயுவுக்குப் பதிலாகத் தண்ணீரைப் புகுத்தினால், ஒலி மீண்டும் வெளிப்படும். வாயு உள்ளே யிருந்தபோது உண்டான கனத்துடன் ஒலி ஏற்படாவிடினும், நன்றாக வெளியிற் கேட்கும். எனவே ஒலி நீர்ப்பொருளினூடும் செல்லுமென்பது புலப்படும். ஒலி கடினப்பொருளி னூடேயும் செல்லவல்லது. விளையாட்டுப்பிள்ளைகள் தந்தியிற்பேசுவது யாவருக்கும் தெரியும். காகிதத்தினால் இரண்டு கிண்ணங்களைச் செய்துகொள்வார்கள். இரண்டு கிண்ணங்களிலும் துவாரமிட்டு, ஒரு நீண்ட (சுமார் 20 கெஜம்) நூலை எடுத்து அதன் இரண்டுநுனிகளையும் முறையே இரண்டுதுவாரங்களிலும் புகுத்து முடிச்சிட்டுக்கொள்வார்கள். முடிச்சுகள் கிண்ணங்களுக்கு உட்புறத்தே துவாரங்களை அடைத்துக்கொண்டுநிற்கும். ஒருவன் ஒருகிண்ணத்தைத் தன் காதின்மீது பொருத்தமாக வைத்துக்கொள்வான். மற்றவன், இரண்டாவதுகிண்ணத்தை நூலினது நீளம் எவ்வளவோ அவ்வளவு தூரம் எடுத்துச்செல்லுவான். நூலானது நேர்மையாக நீண்டுநின்ற பிறகு, கிண்ணத்தை வாயின்மீதுவைத்து மெதுவாகப் பேசுவான். அவன்பேச்சு, பக்கத்தில் நிற்பவருக்கும் புலனாகாதிருக்கலாம். ஆனால், நூலின் மறுநுனியிலிருக்கும் அவனுடைய தோழனுக்குக் கேட்கும். இங்கே பேசுபவனது வாயிலிருந்து புறப்படும் ஒலியானது நூலின்வழியாகக் கேட்பவனிடம் போய்ச்சேருகிறது.

அமைதியாகவிருக்கும் ஒரு நீர்ப்பரப்பினில் யாதானுமோரிடத்தில் அசைவுகள் ஏற்பட்டால் அவ்வசைவுகள் எப்படி அலைகளாக அந்த நீர்ப் பரப்பின்மீது வியாபித்துச்செல்லுகின்றனவோ அவ்வண்ணமே ஓரிடத்தில் ஏற்படும் தனியிசைத்துடிப்புகளும் (அதாவது ஒலி) பொருளினூடே வியாபித்துச்செல்லுகின்றன. அலைகள் குறுக்கலைகள் (Transverse Waves), நெட்டலைகள் (Longitudinal Waves) என இருவகைப்படும். இவைகள் உண்டாகும் விதங்களையும் இவற்றினுடைய குணாதிசயங்களையும் சற்றுக் கவனிப்போம்.

குறுக்கலைகள் (Transverse Waves).

குறுக்கலைகள், மேற்செல்லும் அலைகள் (Progressive Waves), நிலைபெற்ற அலைகள் (Stationary Waves) என இருவிதம். படம் 36-ல் i மேற்செல்லும் குறுக்கலைகளையும், ii நிலைபெற்றகுறுக்கலைகளையும் உணர்த்துகின்றன. படம் 36 i ஐ முதலில் எடுத்துக்கொள்வோம். படம்



படம் 36.

34-ல் குறிப்பிட்ட துடிகோல் (Vibrator) ஒன்றினது நுனியில் மெலிந்து நீண்ட ஒரு நூலானது கட்டப்பட்டிருக்கிறது. துடிகோல் அசைவற்று இருக்கும்போது நூலும் அசைவற்று நெட்டுக்குத்தாகத் தொங்கிக்கொண்டிருக்கிறது. துடிகோலை விரலால் தெறித்து ஆடவைத்தால், அதனுடைய நுனி ப ர என்று குறிக்கப்பட்ட மார்க்கத்தில்தனியிசைத்துடிப்புக்களை (Simple Harmonic Oscillations) இயற்றுகின்றது. துடிகோலிற் கட்டிய நூலானது ஒன்றின்கீழொன்றாக வமைந்த அணுக்களின் தொகுதியாகும். நூலினது மேல் நுனியிலுள்ள அணுவானது துடிகோலினது நுனியுடன் சேர்க்கப்பட்டிருக்கிறதனால், அந்த நூலணுவும் துடிகோலினது நுனியுடன் அசைந்தாடுகிறது. இந்த நூலணுவுக்குக் கீழே ஒட்டியுள்ள நூலணுவும் தனது நிலைப்பிடத்திற்கு (Position of Rest) வலப்புறமாகவும் இடப்புறமாகவும் தனியிசைத்துடிப்பைஇயற்றுகிறது. இம்மாதிரியே ஒவ்வொரு அணுவும் அதற்குக் கீழேயுள்ள அணுவுக்குத் தனது ஆட்டத்தை அளித்துச்செல்லவே சிறிதுநேரத்தில் நூலிலுள்ள அணுக்கள் யாவும் தத்தமது நிலைப்பிடத்திற்கு (Position of

Rest) வலப்புறமாகவும் இடப்புறமாகவும் அசைந்து தனியிசைத்துடிப்புக்களை (Simple Harmonic Motion) இயற்றுகின்றன. துடிகோலானது க ப என்னும் நிலையிலிருக்கும்பொழுது நூலானது படம் 36 i ல் காட்டியவாறு அலை உருவாக வளைந்து வளைந்து நிற்கின்றது. படம் 31-ல் ஒரு உயர்வும் (Crest) ஒரு பள்ளமும் (Trough) சேர்ந்தது ஒரு அலை நீளம் (Wave-length) என, ஒளியின் அலைச்செலவியலிற் கூறியது ஞாபகமிருக்கும். படம் 36 i-ல் ய வ=ல ள=வ ழ=ள ன= அலைநீளம் என்பது விளங்கும். துடிகோலானது ஆடிக்கொண்டிருக்க, அலைகள் நூலினது மேல்நுனியினின்று புறப்பட்டுக் கீழேசென்று, நூல் முழுதும் வியாபித்துவிட்டன. அலைகளெல்லாம், மேலேயிருந்து கீழே நோக்கிச் செல்வது அணுக்களின் ஆட்டங்களினாலாகும். அணுக்களின் ஆட்டங்கள்யாவும் தத்தம் நிலைப்பிடங்களுக்கு இடப்புறமும் வலப்புறமுமாக, அதாவது அலைகள் செல்லும் திசைக்குக் குறுக்காக இருத்தலால், இத்தகைய அலைச்செலவுக்குக் குறுக்கலைச்செலவு (Transverse Wave Motion) எனப் பெயர். மேலும், (படம் 36 i) அலைகள் துடிகோலினின்று புறப்பட்டு ஒரேதிசையாக நோக்கிச் செல்லுதலால், இவ்வலைச்செலவுக்கு மேற்செல்லும் குறுக்கலைச்செலவு (Progressive Transverse Wave Motion) எனப் பெயர். படம் 36 ii ல் ள என்னுமிடத்தில் நூலானது ஒரு அசைவற்ற ஆணியிற் பிணிக்கப்பெற்று, நிலைபெற்ற குறுக்கலைகள் (Stationary Transverse Waves) ஏற்படுவது காட்டப்பட்டிருக்கிறது. அப்பொழுது தோன்றும் காட்சி படம் 36 ii-ல் வரைந்தவாறு. நூலினது நீளமுழுதும் ய ல, ல வ, வ ள, ள ழ, ழ ன எனக் காட்டிய சமநீளங்களோடு அமைந்த வீக்கங்கள் (Ventral segments) நிலைபெற்றுத் தோன்றுகின்றன. இரண்டு வீக்கங்களின் நீளங்களைச் சேர்த்தால் ஒரு அலைநீளம் (Wave Length) ஆகும். நூலின்கண்ணே ய, ல, வ, ள, ழ, ன என்று காட்டிய அணுக்கள் தமது நிலைப்பிடங்களில் அசையாமல் நிற்கின்றன. இந்த ஸ்தானங்களுக்கு முடிகள் (Nodes) எனப் பெயர். மேலும் ட, ண, த, ந, ம என்னும் ஸ்தானங்களில் ஆட்டவிரி (Amplitude) மிகவும் அதிகமாயிருக்கின்றது. இந்த ஸ்தானங்களுக்கு எதிர்முடிகள் (Anti-nodes)

எனப் பெயர். இருமுடிகளுக்கு (Nodes) இடையே ஒவ்வொரு வீக்கமும் (Ventral-segment) ஒவ்வொரு வீக்கத்தின் மத்தியில் ஒவ்வொரு எதிர்முடியும் (Anti-node) இருப்பது கவனிக்கத்தக்கது.

மேற்கூறிய குறுக்கலைச்செலவுகளில் முக்கியமாக ஒரு குணாதிசயம் நமது மனத்திலிருத்தவேண்டும். அது யாதெனின், ஒரு பொருளினூடே குறுக்கலைகள் செல்லுங்கால், வழியேயுள்ள அணுக்கள் யாவும் அலைகள்செல்லும் பாதைக்குக் குறுக்காக ஒரே ஆட்டக்காலத்துடன் (Period of Oscillation) துடித்துக்கொண்டிருப்பதேயாகும். இதுவே குறுக்கலைச்செலவினுடைய முக்கிய குணாதிசயம். நிலைபெற்ற குறுக்கலைச்செலவினது (Stationary Wave Motion) நிகழ்ச்சியைச் சற்று நோக்கின் அதுவும் மேற்செல்லும் குறுக்கலைச்செலவினுடைய (Progressive Wave Motion) ஒரு பரிபாகமே என்பது கிடைக்கும். துடிகோலினின்று ஒரு மேற்செல்லும் அலை (Progressive Wave) நூலினது கீழ்நுனிக்குச் செல்லுகின்றது. அது கீழேயுள்ள ஆணிக்கு வந்ததும் அதிற் முக்குண்டு மீண்டு, ஒரு மேற்செல்லும் அலையாகவே துடிகோலிற்கட்டிய நுனிக்குத் திரும்பிச்செல்லுகின்றது. ஆகவே, கீழேநோக்கிச்செல்லும் மேற்செல்லுமலையும் (Progressive Wave) அதனுடைய மீட்சியலையும் (Reflected Wave) கலத்தலால் (by interference) நிலைபெற்ற அலை (Stationary Wave) உண்டாகின்றது. எனவே, நிலைபெற்ற அலையசைவு (Stationary Wave Motion), இரண்டு மேற்செல்லும் அலையசைவுகளின் (Progressive Wave Motions) கலப்பினுல் (Interference) ஆவது எனத் தெளியப்படும்.

நூலிலுள்ள அலைநீளத்தை (Wave Length) நூலிலுள்ள அணுக்களின் (Frequency) துடிப்பெண்ணுல் (அதாவது துடிகோலினது துடிப்பெண்ணுல்) பெருக்க, நூலில் ஒலி படர்ந்துசெல்லும் வேகம் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஒரு கம்பியிலோ அல்லது நூலிலோ ஏற்படும் துடிப்பு விழுக்காடு (அதாவது துடிப்பெண்) செக்கண்டு ஒன்றுக்கு 500 ஆகவும், அலைநீளம் 50 சென்டிமீட்டராகவும் இருந்தால், அந்தக் கம்பியிலோ அல்லது நூலிலோ

ஒலியினது வேகம் = 500×50 செ. மீ. ஒரு செக்கண்டுக்கு
= 25000 செ. மீ. ஒரு செக்கண்டுக்கு.

100 செ. மீ. ஒரு மீட்டர் ஆதலால், ஒலியானது செக்கண்டுக்கு 250 மீட்டர் வேகத்துடன் செல்லுகின்றது, எனக் கணக்கிடலாம்.

நெட்டலைகள் (Longitudinal Waves).

மேற்கூறிய குறுக்கலைகள் சாதாரணமாக, கம்பிகளும் நூலும் போன்ற கடினப்பொருளினூடே நிகழும். ஆனல், நெட்டலைகளோ பெரும்பான்மையாக வாயு நீர்ப் பொருள்களினூடேயும், ஒரோவழி, கழிகள்போன்ற கடினப்பொருள்களினூடேயும் நிகழ்வதாகும். ஒலியானது நெட்டலைகளாக ஒருபொருளினூடேசெல்லும்பொழுது, மார்க்கத்திலுள்ள பொருட்பகுதிகள், ஒலியின்பாதைக்குக் குறுக்காக அசையாமல், அப்பாதையிலேயே முன்னும் பின்னுமாகத் தீனிபிசைத் துடிப்புக்களை (Simple Harmonic Motion) நிகழ்த்தும். இதுவே குறுக்கலைச்செலவுக்கும் (Transverse Wave Propagation) நெட்டலைச்செலவுக்கும் (Longitudinal Wave Propagation) உள்ள முக்கியமான வித்தியாசம். இனி, ஒலியானது ஒரு துடிகோலினின்று புறப்பட்டு, சுற்றியுள்ள வாயுவினூடேசென்று எவ்விதம் நெட்டலைகளை வாயுவில் உண்டாக்குகின்றதென்பதைச் சற்றுக் கவனிப்போம்.

வாயுவில் ஒலிச்சேலவு: நெட்டலைகள். (Propagation of sound in air: longitudinal waves):-படம் 37-ல், ஒரு துடிகோல் நெட்டலைகளை வாயுவில் உண்டாக்கும் விதம் காட்டப்பட்டிருக்கிறது. துடிகோல் கர,கப, என்னும் ஸ்தானங்களுக்கு வலப்புறமாகவும் இடப்புறமாகவும் ஆடித் தூனியிசைத்துடிப்புக்களை இயற்றுகின்றது. ஒலியானது காதில் வீழ்கின்றது. இது எங்ஙனம்? காதுக்கும் துடிகோலுக்கும் இடையேயுள்ள வாயுவின் உதவியைக்கொண்டு ஒலி துடிகோலிலிருந்து காதுக்கு வந்துசேருகிறது. துடிகோல் அசையாதிருக்கும்



படம். 37.

பொழுது காதுக்கும் துடிகோலுக்குமிடையே யுள்ள ஸ்தம்பவுருவான (ய ல) வாய்ப்பகுதியைக் கவனிப்போம். இந்த நீண்ட வாயுப்பகுதி, ய விலிருந்து ல வரைக்கும் தொடர்பாகவுள்ள பல மெல்லிய சில்லுக ளா லாக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். இந்தச் சில்லுகள் ஒவ் வொன்றும் துடிகோல் தனது நிலைப்பிடத்தில் அசையாது நிற்கும் பொழுது சமமான பருமனுள்ளவைகளாயிருக்கின்றன. துடிகோல் ஆடும்பொழுது அதனுடைய நுனி ப ர என்னும் மார்க்கத்தில் வலப்புற மாகவும் இடப்புறமாகவும் தனியிசைத்துடிப்புக்களை (Simple Harmonic Motion) இயற்றுகிறது. இதே துடிப்பை நுனிக்கருகேயுள்ள வாயுச்சில்லானது வாங்கிக்கொண்டு தன்னுடைய ஆட்டத்தினால் தனக் கடுத்த சில்லையும் தாக்கித் துடிக்கச்செய்கிறது. இவ்விதமாகத் துடி கோல், முதற்சில்லுக்களித்த தனியிசைத்துடிப்பு, முறையே அடுத்தடுத் துள்ள சில்லுகளுக்கு அளிக்கப்பட்டு, காதிற்குள்ளேயிருக்கும் ஜவ்வுக்கு அருகிலுள்ளசில்லுக்கு வந்துசேருகிறது. இத்தனியிசைத்துடிப்பைக் காதினுடைய ஜவ்வும்வாங்கிக்கொண்டுநரம்புகளுக்களிக்கவே ஒலியுணர்வு ஏற்படுகின்றது. சில்லுகளின் அசைவுகள் ஒலியின்பாதையிலேயே இடப் புறமாகவும் வலப்புறமாகவும் ஏற்படுகின்றன. (குறுக்கலைகளுக்கும் நெட்டலைகளுக்கும் வித்தியாசம் இதுவே).

இனி, துடிகோல் அசைந்தாடுவதனால் அதற்கும் காதுக்கும் இடை யேயுள்ள வாயுப்பகுதியில் ஏற்படும் விகற்பங்களைச் சற்றுக் கவனிப் போம். துடிகோல் க ர என்னும் நிலைக்கு வரவும் அதற்கருகேயுள்ள வாயுவானது வலப்புறம் ஒதுக்கப்பட்டுச் செறிவாக நெருங்குகின்றது. ஒரு அரைத்துடிப்புக்குப்பின் துடிகோல் தனது நிலைப்பிடத்துக்கு இடப்புறத்திலுள்ள க பு என்னும் நிலைக்கு வரவே பக்கத்திலுள்ள வாயு வானது அதிக இடம் ஏற்பட்டதனால், சற்று இடப்புறம் விரிந்துகொள் கிறது. மறுபடியும் துடிகோல் க ர என்னும் நிலைக்கு வந்ததும் ஒரு செறிவு ஏற்படுகின்றது. பிற்பாடு க பு வுக்கு வந்ததும் ஒரு விரிவு உண் டாகிறது. இவ்விதமாகச் செறிவுகளும் விரிவுகளும் (Condensations and Rarefactions) ஒன்றன்பின் னொன்றாக ஏற்பட்டு இவைகள் வாயுப் பரப்பினில் ஊர்ந்துசெல்லுகின்றன. படம் 37 ல் செறிவு விரிவுகளி னது அமைப்பு முறையே செ, வி என்னும் எழுத்துக்களாற் குறிக்கப் பட்டிருக்கின்றன. இரண்டு அடுத்தடுத்த செறிவுகளுக்கு இடையே

யுள்ள தூரம் ஒரு அலை நீளம் (Wave length) எனப்படும். குறுக்கலைகளின் சம்பந்தமாகக் கூறியவாறே, இந்த மேற்செல்லும் அலையை (Progressive Wave Motion) ஏற்ற இடத்தில் ஒரு மழுமழுப்பான பலகையில் தாக்கச்செய்து வந்தவழியிலேயே மீண்டுசெல்லவைத்தால் நிலைபெற்ற அலையசைவு (Stationary Wave Motion) உண்டாகும். சே, வி என்று குறிப்பிட்ட இடங்களிலுள்ள சில்லுகள் அசையாமலிருக்கும். இந்த ஸ்தானங்களே முடிகள் (Nodes). இருமுடிகளுக்கு மத்தியில் எதிர்முடி (Anti-Node) உண்டாகும். இரண்டு அடுத்தடுத்த செறிவுகளுக்கு இடையேயுள்ள தூரமும் இரண்டு அடுத்தடுத்த விரிவுகளுக்கு இடையேயுள்ள தூரமும் ஒரேயளவினதாய் ஒரு அலைநீளம் (Wave-length) எனப்படும். வாயுவில் ஏற்படும் ஒலியின் துடிப்பெண்ணை (Frequency), அதாவது துடிகோலினது துடிப்பெண்ணை அலை நீளத்தால் (Wave-length) பெருக்க வாயுவினூடே ஒலி செல்லும் வேகம் கிடைக்கும்.

உதாரணம்:—ஒரு துடிகோலின் துடிப்புவிழுக்காடு செக்கண்டுக்கு 100; வாயுவலை நீளம் 11 அடி. வாயுவில் ஒலியின் வேகம் எவ்வளவு?

வேகம் = துடிப்பெண் × அலை நீளம்.

∴ வேகம் = 100 × 11 அடி செக்கண்டுக்கு

= 1100 அடி செக்கண்டுக்கு.

ஆகவே, வாயுவில் ஒலியானது செக்கண்டுக்கு 1100 அடிவேகத்துடன் சஞ்சரிக்கவல்லது எனக் கிடைக்கின்றது.

(தொடரும்.)

ஸ்ரீ:

குருபரம்பரை.

எம்பெருமானார்வைபவம்.

[௨௬௪-ம் பக்கத்தொடர்ச்சி.]

தேசினார்திருக்கோட்டிநம்பியெனுஞ்செழுந்தவனு
மாசிலாத்திருமாலையாண்டானுமாங்கொருநா
ளீசன்வளர்திருவரங்கத்தெய்தினாவர்பதத்தி
னீசனேன்றனையாண்டநிமலவருளெதிராசன். (௨௦௩)

சென்றிறைஞ்சியிருந்தளவிற்றிருக்கோட்டிநம்பியெனு
மன்றல்கமழ்தார்மார்பனுடையவர்மாமுகநோக்கி
யின்றுமுதற்றிருமாலையாண்டானேடெழின்மாற
னன்றுரைத்ததமிழ்மறைகட்கர்த்தங்கேட்டருள்கவென. (௨௦௪)

வேறு.

செப்பினாதற்பின்மற்றத்திருமாலையாண்டானேடு
மொப்பிலாவிவருக்கந்தவுண்மையையுரைத்தியென்னத்
தப்பறப்பகர்ந்துமீண்டுதிருக்கோட்டியூரைச்சார்ந்தார்
முப்பகையற்றார்மற்றவிருவருமதனின்மூண்டார். (௨௦௫)

வேறு.

சீரார்மாறன்றெரிந்துரைத்ததிருவாய்மொழியின்செழும்பொருளை
யோரருள்சேராளவந்தாரிசைத்தபடியேயெடுத்தெடுத்தாங்
காராவமுதைத்திருமாலையாண்டானருளிச்செயக்கேட்டு
நீராயலைந்துகரைந்துருகியெதிகட்லைவனினைவுறுநாள். (௨௦௬)

ஊனிலறியாக்காலத்துக்குரைப்பான்றிருமாறனையாண்டான்
றேனுட்டிகழுந்துழாய்முடியாய்சிறியேற்கறியாக்காலத்தே
ஞானப்பொருளைத்தந்தனையந்நலத்தையழிக்கும்பொருட்டாயோ
வீனப்படுமிவ்வுடலோடும்வைத்தாயென்றுவினவிசைத்தான். (௨௦௭)

வேறு.

ஆங்கதுகேட்டுடையவருமதின்முன்னும்பின்னுமுள
வோங்குறுசேர்ப்பனுவலுறுமுறையெல்லாங்கேட்டருளி
யீங்கிதனுக்கிவ்வண்ணமாமேலோவெனவிசைத்தார்
சாங்குமருட்டிருமாலையாண்டானுஞ்சாற்றென்றான். (௨௦௮)

முன்னும்பின்னுங்களிதோன்றமொழிந்தாங்கிடையிலொருபாட்டி
வின்னருரேன்றுமிழவாகவிசைத்தான்மாறனெனினுமதின்
மன்னும்பொருளம்மகிழ்மாறன்மாயனோடேமாதவனே
மின்னுநேமிநெடுமாலேவினையேனுயிரேவித்தகனே. (௪0௯)

அறியாமாமாயத்தமருமடியேற்கறியாக்காலத்தே
நெறியாஞானமளித்தன்னைநீங்காவன்புன்னடிமைக்கண்
வெறியார்துளபமுடியானேவைத்தாயிந்தமேதினியிற்
பொறியார்புலன்கள்வெள்கும்வகையென்னவியந்துபுகழ்ந்தனனால். (௪௧0)

வேறு.

என்பதையெதிகணாதனியம்பிடக்கேட்டபோதே
யன்பினாற்றிருமாறன்னையாண்டவனாளவந்தார்
முன்பெமக்கருளிச்செய்யக்கேட்டிலமுனிவன்முன்னாட்
டுன்புறும்வெகுளிபொங்கத்தொடங்கியதிருட்டிபோல. (௪௧௧)

தொடங்கினீர்நீருமாறன்சுருதியின்பொருளினுள்ளே
யிடம்படுசிந்தையெந்தையியமுனைத்துறைவர்காணாத்
திடம்படுபொருளைநீரோதெளிந்துரைக்கின்றீரென்ன
வடங்கிடாச்சிந்தைபெற்றாலாவதுமிதுவோவென்றே. (௪௧௨)

தெருளின்மிக்கதிருமலையாண்டான்றிருவாய்மொழிக்கர்த்த
மருளிச்செய்யறவிர்ந்திருந்தானதுகண்டாசிலெதிராசன்
பொருளைக்கேட்டுநயமுணர்ந்துபுந்தியுள்ளேயடங்காம
லிருளிற்படிந்ததுன்மதியாலிசைத்துக்கெடுத்தேனெனையென்ன. (௪௧௩)

பெரும்பசியாளன்முன்னேபோமுதத்தையிட்டிங்
கருந்தெனவைப்பவாரியாங்கவனருந்தும்போதிற்
பருந்தினும்விரைவிற்பற்றிப்பறித்திடக்கொடுத்ததேபோ
லிருந்திருந்தாவிவாடியெதிகடந்தலைவனொந்தான். (௪௧௪)

வேறு.

அந்தவாறனைத்தினையுமாளவந்தார்திருவுருவைச்
சிந்தையுறவைத்தவளர்திருக்கோட்டிநம்பியெனு
மெந்தைபிரான்கேட்டருளியிலங்கியசீருடழைப்ப
வந்தனனத்திருமாலையாண்டான்முன்வரக்கண்ட. (௪௧௫)

சீரியநற்றிருமாலையாண்டானுஞ்சென்றெதிரே
பாரிலுறப்பணிந்தேத்தப்பழமறைதேர்நம்பியுமக்
கூரியனையுடன்பணிந்தார்குருமணியாமிருவர்களு
மார்வமுறவளவளாவியொருதலத்திலமர்ந்ததற்பின். (௪௧௬)

திடவான்மறையைவடித்தெடுத்ததிவாய்மொழிகடனக்கர்த்த
நடவாநின்றதோவென்றுநம்பிதிருமாறனையாண்டான்
மடமான்பொருட்டாற்றென்னிலங்கைமன்னைமாய்த்துப்பின்னொருநாட்
கடவான்களிற்றின்கொம்பொசித்தான்கருணைதிரண்டவாளவந்தார். (௬௧௭)

வேறு.

மெய்ச்சுவாவப்பொருள்விளம்பினாதை
யச்சுவாபத்தினிலறையக்கேட்பவர்
விச்சுவாமித்திரதிருட்டிமீளவு
நச்சுவார்பண்ணினனடப்பதெவ்வணம். (௬௧௮)

வேறு.

என்றனனதுகேட்டாங்கேயிருந்துறநகைத்துநம்பி
நன்றூதுசெய்தார்தம்மைநவில்கநாமறியவென்று
றொன்றியகருணைமிக்கதிருமாலையாண்டானோங்கு
மன்றல்சேர்மார்பாபூதூர்வந்தவதரித்தானென்றான். (௬௧௯)

நீட்டுபல்புகழாய்முன்னஞ்செண்பகமாறனன்பிற்
கோட்டியபனுவலாகுங்கொழுந்தமிழ்தன்னிலெந்தப்
பாட்டினிற்றர்க்கமந்தப்பத்தனுநீயுமென்ன
வாட்டமில்குணத்தானம்பிமற்றவனோடுகூற. (௬௨0)

வேறு.

அறியாக்காலமெனும்பாட்டுக்காளவந்தாரருளியது
நெறியாரெதிகடனிநாதனவமாய்நினைத்துநிகழ்த்தியதுங்
குறியாஞானத்திருக்கோட்டிநம்பிக்கடைவேகுறித்துரைத்தான்
றறியார்களிற்றின்றுயர்தீர்த்ததிருமாறன்னைத்தானுண்டான். (௬௨௧)

வேறு.

ஆங்கதுகேட்டுநம்பியாளவந்தாருமிந்தப்
பாங்குறுபொருளைமுன்னம்பகரநாங்கேட்டோமந்தத்
தாங்குபல்குணத்தின்மிக்கதலைவன்முன்புணராவர்த்த
மீங்கிவன்கருத்திற்றோன்றுதெனவிருமென்றுபின்னும். (௬௨௨)

வேறு.

அறைவானறியாதவன்றன்னையறிவிக்கின்றேனெனுநினைவை
மறையாயிரமும்வல்லவனேமறத்திசாந்திபிணிபக்கற்
குறையாநெறிசேர்வசுதேவர்குமரன்படித்தன்றுணர்ந்தருளு
முறையாமிந்தவிளையாழ்வானம்பாற்கற்றலெனமொழிந்தே. (௬௨௩)

வேறு.

சீரியநம்பியந்தத்திருமாலையாண்டானோடு
மேரியலெதிகணுதனிருந்தவத்தலத்தினண்ணிக்
கூரியபொருளையோதாதுணர்ந்தவக்குறியினாலும்
பாரியலுயிர்கட்கெல்லாம்பரிவுறுகருத்தினாலும். (௪௨௪)

மதுவமர்துளபத்தாரான்மானிடர்க்காகமண்ணி
லிதுவுமோரவதாரந்தானெடுத்தனனென்னவுன்னிக்
கதுமெனவிறைஞ்சினாரக்கவையறுகுணத்தினானு
மெதுசெய்தாரிவரென்றன்னாரிணையடியிறைஞ்சினைந்தான். (௪௨௫)

உருகினைந்தவணநின்றவுத்தமனோடுமற்றை
யிருவருமிருந்தகாலையெம்பிரானிளையாழ்வாரைப்
பொருவிலாநம்பியந்தப்புங்கவனோடுமைந்தா
வருமறைப்பொருளினத்தமனைத்துங்கேட்டறிந்ததற்பின். (௪௨௬)

வேறு.

அன்பினாழ்வார்திருவரங்கப்பெருமாளரையர்க்காளவந்தார்
முன்புகொடுத்தாரிரண்டுண்மைமுறையாலதுகேட்டறிந்துணர்ந்த
பின்புசீராமாயணத்தைப்பெரியதிருமலைநம்பியெனு
மின்பவாரியுடன்கேட்டியென்னநோக்கியிசைத்தருளி. (௪௨௭)

மீண்டானம்பிதிருக்கோட்டியூரின்மன்னிவீற்றிருந்தான்
நீண்டானுலகமாவலிபாற்குறளாயிரந்துநின்றவனை
யாண்டானுடனேயாழ்வார்களருளிச்செயல்கட்கல்வழக்கைத்
தீண்டாச்சிந்தையெதிராசன்சிறந்தபொருளின்றிறங்கேட்டு. (௪௨௮)

நாராயணனுமிறைநிலையுநடுங்காவுயிரினன்னிலையுஞ்
சீராரிருவர்க்குளமுறையுந்திணிந்தவிருளாஞ்சேணிலையும்
ஏரார்சரணத்துறுநெறியுமின்பத்தியல்புமனுபவமும்
நேராம்வண்ணந்திருமாலையாண்டான்காட்டவந்நெறியால். (௪௨௯)

எந்தைபூதூரிளையாழ்வாரிருகண்டாரைமழைபொழியச்
சிந்தைகுளிரக்கேட்டழகார்திருமான்மார்க்கமெனச்சிறந்த
அந்தமில்லாநெறியெல்லாமகத்துட்டெளிவுற்றனுபவத்தின்
வந்தவாரிப்பெருஞ்சுழியிலடங்கித்தம்மைமறந்தருளி. (௪௩௦)

இருந்துதெளிந்துதிருமாலையாண்டான்செய்யவிணையடிக
டிருந்தவிறைஞ்சிவிடைகொண்டுசீராராளவந்தார்முன்
மருந்துபிறவிப்பெரும்பிணிக்குவைத்தார்பலர்பான்மற்றவைகள்
பொருந்துமிடங்கடொறும்புகுந்துபெறுவார்போகமிக்கிலங்கும். (௪௩௧)

சீராராழ்வார்திருவரங்கப்பெருமாளரையர்திருவடியை
யாராவன்பினுறவணங்கியவருக்குகந்தகயிங்கரிய
மேரார்மஞ்சட்காப்பரைத்தாங்கின்பமிக்கபுனலாட்டி
நேராய்நின்றானறுதிங்கணிலவுங்கருணையெதிராசன். (௬௩௨)

வேறு.

ஆங்கதிலொருநாண்மற்றவர்தமக்கென்றரைத்தசீர்மஞ்சளன்றன்பின்
பாங்குறுமையினாற்றிருமுகம்வாடப்பார்த்துமீண்டரைத்தெழும்பரிவா
லோங்குநீராட்டவரையருமிவரையுவப்பொடுநோக்கியென்னாவி
தாங்குறப்பெற்றசர்வசொத்தினையுந்தலைவனேனைக்கொளச்சமைந்தோ. (௬௩௩)

இன்றுநீயிதுசெய்திட்டதென்றிரங்கியெம்பிரான்வலத்திருச்செவியி
லன்றுபதேசஞ்செய்தனன்முனைநாளாளவந்தார்தமக்குரைத்த
வொன்றியபொருளையுடையவர்பெற்றாங்குவப்பொடுமவர்பதம்வணங்கிச்
சென்றனர்மடத்திற்றொண்டர்களோடுஞ்செறிந்தவண்சிலபகல்செலுநாள். ()

கங்கையின்கரையின்மன்னும்வேதியரிற்கவையிலாமனத்தனோர்மறையோன்
பொங்குநால்வேதமூவறுபுராணம்புவியின்மற்றுளபலகலைகள்
அங்கமர்ந்தோதிப்பின்புறப்பட்டேயாசைகளெட்டினுமடக்கந்
தங்குறவடித்துச்சமயமோராறின்றலைவரைநிலையறவென்றே, (௬௩௫)

இனியெதிரில்லைநமக்கிருநிலத்திலென்றதற்பின்புமீண்டேகி
நனிதருங்கங்கைக்கரையினைமுன்போனண்ணியாங்கேகதண்டேந்து
முனிவர்கள்சூழவேகதண்டதனின்முறையுறுசன்ணியாதத்தைத்
தனியனாய்நின்றான்பற்றினான்பற்றிச்சகமெலாந்திறையிடவிருந்தான். (௬௩௬)

வேறு.

அப்படியிருப்பவந்நாளணியரங்கத்தினின்றோர்
செப்பருமறையோனங்கேசென்றனன்கங்கையாடு
வொப்பிலானவனைநோக்கியெங்குளாயுரைத்தியென்றான்
றப்பறவவனுநின்றுசாற்றினனரங்கமென்ன. (௬௩௭)

அத்திருநகரிற்கல்விக்கதிபாராறைதியென்றான்
உத்தமகுணத்தாய்மூன்றுதண்டனோருவமையில்லான்
நித்தரிலொருவனென்றிந்நீணிலமறையத்தக்கான்
தத்துவவாதிபுத்தன்சைவனென்றாதியாய. (௬௩௮)

வேறு.

இருளைச்சீறியெழுந்திலங்குமிரவியென்னவிருக்கின்றான்
மருளற்றொளிருமெதிராசன்மற்றையவன்றன்றிருநாமம்

தெருளுற்றவனேயறிதியெனச்செப்பிநின்றான்மறையவனப்
பொருளைச்சிந்தையுறநிறைத்தப்புலவன்றனைக்கண்டிடுதுமென. (௫௩௯)

ஏகதண்டிபலபண்டிக்கிசையவேற்றிச்சாத்திரங்கள்
மாகம்வெருவமண்ணெளியவூர்ந்துவிரைவின்வழிநடந்து
மேகவண்ணர்கண்டுயிலுமென்காவிரிசூழ்விண்ணளக்கும்
பூகவேலிப்புனலரங்கம்புக்கான்புலவர்புலியன்னான். (௫௪௦)

புக்கமுனிவனரங்கத்துட்புனிதன்கழல்கள்புகுந்திறைஞ்சித்
தக்கபுகழ்சேரெதிராசனெங்கேயென்றான்சந்நிதியிற்
றொக்கபகவற்பத்தரிடைச்சுடரோனென்னப்பொலிந்திலங்கி
நக்கன்புகழுநின்றமுனியிங்கேகாணுனெனநின்றான். (௫௪௧)

வேறு.

எண்ணருஞ்சீரெதிராசனீயேயாகி
லெளியேனுஞ்சிலதர்க்கமிசைந்துநின்பாற்
பண்ணுதற்கேயொருப்பட்டுவந்தேனந்தப்
படிசெய்யவேண்டுமெனப்பகர்ந்தானெம்மான்
மண்ணவர்கள்காணநாந்தர்க்கஞ்செய்தான்
மற்றுநீதோற்றிடிலென்செய்வதென்னத்
திண்ணமறிசெருப்பெடுப்பெனுனக்குநானே
தேவர்களுமானிடருஞ்சிரிப்பவென்றான். (௫௪௨)

வேறு.

நன்றென்றுங்கதற்கிசைந்துநவையறுசீரெதிராசன்
குன்றென்றுங்குயர்ந்தோங்குங்கோதறுசீர்மண்டபத்திற்
சென்றன்றுங்கினிதமர்ந்தார்திரிதண்டர்பலர்சூழ
ஒன்றேன்றேயுரைதண்டனெதிரேவந்துடனிருந்தான். (௫௪௩)

வேறு.

ஒருதினமென்னநாட்பதினெட்டாங்குடையவருடனவனெதிர்ந்தே
யருமறைமுடிவினின்றுதர்க்கிக்கவவனைவென்றிடப்படாமையினற்
பொருவரும்பூதூரிறைவனாரற்பம்புந்தியிற்சலித்தனராதுகண்
டிருவருஞ்சலித்தோமின்றுபோய்நாளைவருகவென்றேகதண்டுடையான். ()

முன்னெழுந்திருந்துதன்னிடம்புகுந்தான்முகுந்தனையகந்தனிலனிமத்தான்
பின்னெழுந்திருந்துநம்பெருமாளாம்பிரமனுர்தாளதனையவணங்கி

மன்னுசீர்நாதமுனிவரானுலுமாசறுமியமுனைத்துறைவ
ரென்னுநான்மறைதேராளவந்தாராமெம்பிரானுலுமுன்விதித்த. (௪௪௫)

திருவருள்வளருந்தெரிசனமடியேனேதுவாச்சிதைவதோசிதையா
வருமறைமுதல்வாவெனவுரைத்திடலுமங்கனுருரைசெய்வாருனக்கே
பொருவிலாச்சீடனொருவனைக்கொணர்ந்தேன்பொன்றுமோநந்தெரிசனந்தா
னிருவருநாளையெதிர்ந்தபோதிதுவேயியம்புவானவன்முனமியம்ப. (௪௪௬)

பின்புநீயிதனைப்பகருதியென்னப்பீடுறுமீருரைபகர்ந்தே
யென்பொலாமணியுங்கண்டுயில்செயவாங்குடையவரிலைவயருளிறையை
யன்பினல்வணங்கிமீண்டுதம்மடம்புக்கன்றையிற்பொழுதெலாமிருந்து
துன்பிலான்கற்றகல்வியையுணர்ந்துதுஞ்சிலாநெஞ்சினில்வியந்தே. (௪௪௭)

மற்றைநாளெழுந்துதர்க்ககூடத்தின்மாசிலாமறைமுதல்பலநூல்
கற்றவன்வருமுன்பிருந்தனன்பின்பக்கலைவலானெய்தினன்கண்ணு
லுற்றுறவிருந்தவுடையவர்முகத்தைநோக்கினனுண்ணிறைமகிழ்வா
லிற்றைநாள்வெல்லுமிவனமையென்னவெண்ணியாங்கிருந்திவையிசைப்பான்.()

வேறு.

ஆற்றேனுனக்குநானீடோவங்கீகரித்தியெனையுனக்கே
தோற்றேன்றோற்றேனெதிராசாவென்றானெந்தைதுகளில்லாய்
சாற்றாய்தர்க்கம்பின்காண்டுமென்றானவனுந்தனிமுதலே
நேற்றேசவித்ததிருவுளத்தைநிமலாநீயேயகல்வித்தே. (௪௪௯)

சிந்தையார்ந்தகளிப்போடுஞ்சீரார்கருணைமுகத்தோடும்
வந்தாங்குதயகிரிமருவும்வானுரிரவியெனத்தோன்றி
யெந்தைநீயேயின்றிருந்தாய்யானேவெல்வதினியுன்னைத்
தந்துன்சரணமெனைக்காத்திதலைவாவென்னச்சாற்றினன். (௪௫௦)

வேறு.

ஆங்கதுகேட்டெதிராசனப்படியேனுரைத்தனனா
மோங்குமறைமொழிப்படியேயுரையாடியதில்நானே
பாங்குபெறவென்றலப்படிசெய்வென்பகரென்றான்
றாங்குமொருதண்டன்மூன்மால்சாற்றியதைச்சாற்றினன். (௪௫௧)

மற்றதற்குமாற்றமந்தமாயவனுர்கட்டுரைக்க
வுற்றதிருமொழிப்பொருளையுடையவருமெடுத்தறைந்தார்
கற்றுணர்ந்தோன்மூட்டுண்டேன்கள்வனேனெனவெழுந்து
நற்றவனுஞ்சேரெதிராசநமோநமவென்றிறைஞ்சினன், (௪௫௨)

வேறு.

திருவடியிணையிற்றாழ்ந்தசெவ்வியோன்றன்னையெந்தை
யிருகையாலெடுத்தன்றன்னானேந்தியவேகதண்டைத்
தருகெனவாங்கியாங்கேதடையறமுரித்துப்போட்டப்
பொருவிலாநினைவினார்க்குப்புனருபநயனம்பண்ணி. (சருந)

பண்ணமரும்வேதாந்தம்பகருஞ்சீர்த்திரிதண்டில்
விண்ணவர்கடொழுநாலாமாச்சிரமம்வியந்தளித்தங்
கெண்ணருஞ்சீரருளாளப்பெருமாளெம்பெருமானார்
நண்ணுமிவர்திருப்பெயரொன்றுரைத்தருளிநாடறிய. (சருச)

ஒருயிருடலொன்றாகவுறைந்தவெம்பெருமானார்க்கங்
கீருயிருடம்புமாங்கேயிரண்டெனவிசைக்கப்பட்டுச்
சீருயிர்க்கிரமத்தாலுந்திருந்தியஞானத்தாலு
மாருயிர்க்கிதங்கள்பண்ணியங்ஙனம்வாழுநாளில். (சருரு)

வேறு.

ஒருவராயுலகமனைத்தையுந்திருத்தற்கொருப்பட்டவுடையவரந்தப்
பொருவிலாநிலையான்றிறத்தினைநோக்கிப்புந்தியின்மகிழ்ந்திவனெமக்குக்
குரவனாந்திறமுந்தோழனாந்திறமுங்குணத்தினிலுளனெனவவனோ
டிருவராயிந்தவுலகினைத்திருத்தவினியெளிதெனவுளத்தெண்ணி. (சருசு)

வேறு.

திடமொன்றுமனத்தெந்தைசீபெரும்பூதூர்வள்ளல்
மடமொன்றுவேறாகமற்றவர்க்குப்பண்ணுவித்துக்
கடமொன்றுவினையில்லாக்காதலரையதிலிருத்தி
நடமன்றுவிடவரவினடித்தபிரான்றெரிசனத்தில். (சருஎ)

வேறு.

அனைத்தையுந்தான்முன்றேசிகரருளவறிந்தமையாங்கவர்க்கறைந்து
தனைத்தொடர்ந்துய்வானடைந்தவர்தமையத்தவமிகுந்தானிடத்தாக்கி
வினைத்தொகையறுக்குந்திருவிலச்சினைக்கோல்விளங்குறவாங்கவர்க்களித்துத்
தினைத்துணையளவுஞ்சிந்தையிற்பிரியாதிருந்தவண்சிலபகல்செலுநாள். (சருஅ)

வேறு.

பெரியநம்பிதிருக்கோட்டிநம்பியன்பிற்பேசரியதிருமாலையாண்டானென்னும்
விரிபுகழ்சேர்மூவருந்தம்மைந்தரோடுமேவினர்களெதிராசன்விளங்குஞானத்
தெரிவரியதிருமுடிசம்பந்தமுள்ளாராயினுந்திருவடிசம்பந்தம்வேண்டி
யரியநிலைமைந்தர்களையெதிராசன்பாலாசரிப்பித்தாருலகிலல்லனீங்க. (சருகூ)

அந்நாளிலுடையவர்க்காட்செய்யவென்றேயநந்தாழ்வானெச்சரணன்மருதூர்நம்பி
தொன்னாளிற்றவஞ்செய்திப்புவியிற்றோன்றுந்தொண்டனூர்நம்பியெனுந்தூய்
மன்னாநின்றாரவரைப்பூதூரெந்தைமாசிலாவருளாளப்பெருமாளாய [மைமிக்கார்
வென்னாவியெம்பெருமானார்தம்பக்கலேகிநீராசரிமினின்றேயென்றார். (௪௬௦)

அப்படியேயாசரித்தபின்புதன்பிலருளாளப்பெருமாளெம்பெருமானாரும்
ஒப்பரியார்தமைநோக்கியென்னையாண்டவுடையவர்தந்திருவடியேதஞ்சமாக
எப்பொழுதுமிருந்திடுநீரிதுவேயுண்மையென்னாவிக்குறுதுணையுமிதுவேயென்னச்
செப்பரியநால்வர்கட்குமுபதேசித்தத்திருமிக்காருடன்வாழ்ந்துசெல்லுநாளில். ()

வேறு.

பின்னுஞ்சிலவர்வடதிசையினின்றும்பிரான்சேரரங்கத்தின்
மன்னுமிராமாநுசன்றன்னைவணங்கவேண்டுமெனவந்து
பொன்னிசூழுமரங்கத்துட்புகுந்தாரவர்கட்கெதிராக
முன்னமுரைத்தவருளாளப்பெருமாளேகமுன்பணிந்தே. (௪௬௨)

வேறு.

எம்பெருமானார்மடமேதியம்புமென்றாரவரோடுந்
தம்பெருமானாரிருக்குந்தலங்காட்டியதுவென்றார்
நம்பெருமாடமக்கினியாரொருநாமத்திருவாதி
லும்பருமாநிலத்தவருந்தொழுதேத்துமுடையவர்வாழ். (௪௬௩)

இடமோதானதுவென்றாரெய்தினர்மற்றதுகேட்டுத்
திடமாயவாருயிருஞ்சிந்தனையுந்தடுமாறி
விடமாரவருந்தினர்போன்மெய்பதறிவீழ்ந்தெழுந்து
தடவானிலிரவியுடன்மின்மினியுஞ்சொலத்தகுமோ. (௪௬௪)

கூடுமுயிருங்குமண்டையிடக்கொல்காலக்கொடும்பிறப்பி
லோடிவாடுமெனதுயிர்க்குமுலையாநிலையாயொளிமயமாம்
வீடுகாட்டியாண்டானுக்கிணையோநாளும்விளம்புதற்கு
நாடுநகருநன்கறியநன்றாயுய்ந்தேனானென்ன. (௪௬௫)

ஆங்கவின்றுமீண்டுதனதிட்டானங்களனைத்தினையும்
பாங்கொன்றின்றியறவிகழ்ந்துபதியையிடித்துப்பொடியாக்கி
யெங்குமுள்ளத்துடனிற்பவிராமானுஜனுமதுகேட்டன்
றேங்குமடியார்புடைசூழச்சென்றான்விரைந்தவ்வுத்தமன்பால். (௪௬௬)

ஆசாரியனைக்கண்டளவிலாசிலருளாளப்பெருமான்
சேசார்கழற்கீழுறப்பணியத்திருக்கையாலேயெடுத்தணைத்து
மாசாகாதசிந்தனையும்வருந்தமடத்தையிடித்ததிறங்
கூசாதருள்கவெனக்கேட்பக்குணத்தின்மிக்கான்கூறுவான். (௪௬௭)

வேறு.

என்னுயிர்த்தலைவாகேட்டியிற்றைநாட்காலத்தாலே
மன்னும்வடபாற்றிருநதிக்குவிடைகொள்பொழுதில்வழியெதிரே
யுன்னைத்தேடிச்சிலர்வந்தாருரைத்தாரிரண்டெம்பெருமானுர்
பன்னப்பட்டவிருவர்களிற்பகரும்பூதூர்நகர்வள்ளல். (௪௬௮)

இடத்தைக்காட்டுமெமக்கென்றுரென்னையாண்டார்க்கிணையோநான்
றிடத்தைக்கொடுக்குமான்பாலைப்பொசிப்பவிடினுந்தீயரவு
விடத்தைக்கொடுத்தல்போலன்றேவினையேனறிந்ததத்திறத்தான்
மடத்தையிடித்ததினியென்றுமாசிலாய்நின்சந்நிதியில். (௪௬௯)

இருந்துவினையேற்கடுத்ததொழிலியற்றிவாழ்வேனதுவல்லாற்
பொருந்துகில்லேன்வேறிருத்தல்புனிதவென்னத்திருவடியிற்
றிருந்தவிறைஞ்சவதுகண்டசீமான்பூதூரிளையாழ்வார்
வருந்தவேண்டாநம்மருகேமடத்திலிருத்தியெனக்கொடுபோய். (௪௭0)

அன்புகூர்ந்தோரதிகாரமிருந்தபடியேயெனவணைத்துப்
பின்புந்திருவாய்மொழிப்பொருள்கள்பேசவரியவிராசியங்கள்
இன்பம்வளரவவர்க்குரைத்தாரிணையிலருளாளப்பெருமான்
துன்பங்கடிந்ததிருவுளத்திலெல்லாந்தரித்துத்துகளில்லா. (௪௭௧)

வேறு.

பேசருஞானசாரம்பிரமேயசாரமென்னத்
தேசுறுமிரண்டுநூலுஞ்செப்பியாங்குடனேமன்ன
மாசிலாவெதிகளுதனவ்வணம்வாழுநாளில்
ஈசனும்வேங்கடத்துளெம்பிரானெதிராசன்பால். (௪௭௨)

வந்தொருகங்குற்போதில்மாசறுகனவுதன்னி
லந்தமில்குணத்தினுனேயாசில்வேங்கடத்தினுளுஞ்
சிந்தனைவருந்தவென்னைச்செய்கின்றார்சிலர்களந்தப்
பந்தநீர்க்கவேண்டுமெனப்பகர்ந்தருளுங்காலை. (௪௭௩)

புண்ணியசிந்தையெந்தைபுகலெதிராசன்றானு
நண்ணியகனவுதன்னின்ஞாலமுண்டுமிழ்ந்தவெந்தாய்

திண்ணிமையோடுநின்பாற்றீமைசெய்நீசர்யாவர்
எண்ணினான்தற்குச்செய்யுங்கருமமேதியம்புகென்றான். (சஎச)

வேறு.

ஆனதிறத்தையுரைக்கின்றேனன்பாகேட்டிதீயவினை
போனகாலந்தனிலியற்றிப்புவியிற்குருடாய்முடவர்களாய்
மானமில்லாக்கூனர்களாய்மைந்தரில்லாமலடர்களாய்
ஈனமாகிப்பிறந்துழலுமிவர்களெல்லாம்வந்தெய்தி. (சஎரு)

இல்லரப்பொருளைத்தருதியெனவெடுத்தமலர்கொடுத்ததொடர்
பல்லாயிரங்களெனக்களித்துப்பகலுமிரவுமிரந்தெம்மைக்
கொல்லாநின்றாரதைமாற்றிக்கோதிலாதகுணத்தினனாய்
எல்லாப்பொருளுமுடையவனாய்யாதுமெவைவேண்டாதவனாய். (சஎசு)

ஒருவனுண்டேல்வரவிடுதியோங்குநின்னையுற்றிறைஞ்சி
மருவும்பாகவதர்தம்மின்மாசிலாதாயெனவறைந்தான்
றிருவின்கேள்வனெதிராசன்றிருக்கண்விழித்தங்குடனெழுந்து
பொருவில்கனவின்றிறமெல்லாம்பொருக்கென்றுரைத்தங்கிருந்தவரில். ( )

அநந்தாழ்வானையுறநோக்கியாசிலாதாய்வேங்கடவன்
மனந்தான்மகிழத்திருமாலைமலைமேலேகிச்சமைத்தளித்துத்
தினந்தான்வருதிநீயென்னத்தெண்டனிட்டாங்கெழுந்திருந்து
கனஞ்சேர்குழற்றன்மனைவியொடுங்கருணைமுகில்சேர்வேங்கடத்தில். ( )

சென்றுமன்னிமாயவற்குத்திருப்பூந்தோப்பொன்றாக்குதற்குக்
குன்றில்வேலியுறக்கோலிக்குளிர்நீரேரிப்பெருமேட்டை
யன்றுநோக்கிவெட்டியெடுத்தகலவிடுவித்தத்தலத்தில்
மன்றல்கமழும்பூமரங்கள்வைப்பானினைந்துமனைவியொடும். (சஎகூ)

கொட்டுமதற்காங்கூடைகளுங்கொண்டுசெறிந்தாங்கனந்தாழ்வான்
வெட்டியெடுக்கவவர்மனைவிவிளங்கும்வயிற்றிலொருபுதல்வன்
எட்டுமாதமாயிருப்பவிருண்டுநீண்டகருங்குழன்மேற்
பட்டசுமடாய்க்கூடையின்மண்பலநாட்சுமந்துபரிவினொடும். (சஅ0)

வருவாளந்தமயிலனையாள்வயிற்றிற்கனத்தாற்றலைச்சுமையால்
ஒருநாளிளைத்துக்கூடையொடுமோயும்பரிசையுறநோக்கித்
திருமாமகளார்தனிக்கேள்வன்பீதாம்பரஞ்சேர்திருவரையின்
மருவாக்கட்டுக்கச்சையொடோர்மனுவாய்வயதுமீரைந்தாய். (சஅக)

ஒட்டர்குலத்திலுதித்தவன்போலோங்குநெறிசேரனந்தாழ்வான்
கட்டியடிக்கும்வெளிப்படிலக்கமலையனையாளுறுவருத்தம்
மட்டுமதியுமிலையந்தோவென்னவந்தமாதினெதிர்ப்
பட்டவகனந்தன்விழிகளினேர்படாதுமறைந்தோர்பழுவத்தில். (௬௮௨)

நின்றுகூடைதனைவாங்கிநிகரிலொளிசேர்நீண்முடியி
லன்றுதாங்கிக்கொடுபோய்ப்போட்டவள்பான்மீண்டுமதுகொடுத்து
மன்றல்கமழுந்துழாய்முடியானிற்பவந்தமயிலனையாள்
சென்றாள்விரைவிலதுகண்டவனந்தாழ்வானத்திருவினைநம். (௬௮௩)

வேறு.

கூடைமண்ணிட்டுமீளக்குறித்தனதலமுந்தூரம்
மாடொருதலத்திற்போட்டுவந்தனைகொல்லோவிப்போ
தேடவிழ்குழலினாளேயென்செய்தாயென்றான்மாது
தாடொழுதவனைநோக்கியத்திறஞ்சாற்றலுற்றாள். (௬௮௪)

மறுவறுமனத்தினானேவழியிடையெதிரேவந்தே
சிறுபயலொருவனொட்டர்சென்மமேதோன்றிநின்றான்
விறுவிறென்றோடிவந்துமேவுமென்னிளைப்பைநோக்கித்
துறுமயிர்த்தலைமேற்கூடைதுண்ணெனவாங்கிவைத்தே. (௬௮௫)

போட்டுமீண்டென்பாற்கூடைபொருக்கெனத்தந்தானென்றாள்
வாட்டடங்கண்ணாள்கேட்டமறையவனிறையென்றெண்ணிக்
கோட்டியதொழிலைத்தானுங்கூறிடவந்தான்றன்னைக்
காட்டுகின்றனைகொலென்றான்காரிகைவருதியென்றாள். (௬௮௬)

நன்றெனவெட்டியிட்டுநாரியார்தலைமேலேற்றி
மன்றல்சேர்குழலாய்முன்னேயேகென்றோர்மாறுந்தாங்கிச்
சென்றனனனந்தாழ்வானச்சேயிழைவர்வுநோக்கி
நின்றனன்மாயன்காட்டியிவனென்றாணிகரிலாதாள். (௬௮௭)

வேறு.

தேசார்கருணைத்திருவுருவைத்திருந்தநோக்கியநந்தாழ்வான்
ஆசாரியனனறெனக்குவந்தேயருளும்பணியைச்செந்திருவின்
நேசாபரிக்கவந்தனைகொல்நின்னிலென்னமாறுகொடு
கூசாதடிப்பவிரைந்தோடிச்சென்றான்கருத்தைக்குறித்திறைவன். (௬௮௮)

அடிக்கும்வன்கைக்கெட்டில்நமையையமில்லைகைப்பிடியாப்
பிடித்துக்கொள்ளிற்கொல்லுமெனப்பெருமானோடியோர்நடலம்
நடிப்பவெருட்டியநந்தாழ்வானுமுயலும்போற்றொடாத்
தடித்தங்குயர்ந்தொருமரத்தினொளித்தானமரர்தனிநாதன். (௬௮௯)

வேறு.

ஆசிலாவனந்தாழ்வானம்மரத்தைவிழுந்திறைஞ்சி
யீசனேயினியிவணஞ்செய்யேலென்றெழுந்திருந்து
வாசவார்குழலியொடுமீண்டுநந்தவனஞ்சார்ந்து
தேசுறுமப்பணிசெய்துதிருமாலைசமைத்தளித்தே. (௪௧௦)

வருநாளின்மண்முழுதும்வானகமுங்காத்தருளுந்
திருநாதனனந்தாழ்வான்றிறநோக்கியிவனம்மை
யொருநாளுமோர்பொருளும்வேண்டாதவுணர்வினனாய்
இருநான்குதிருவெழுத்தின்படிவாழ்ந்திங்கிருக்கின்றான். (௪௧௧)

ஆங்கதுபொய்மெய்யென்னவளந்தறியவேண்டுமென
வேங்கியுலகலமெய்தவிரும்பிணியையருந்தவன்மேற்
பாங்குறுசெந்திருவின்முகம்பாராதேயேவினான்
தாங்கினனப்பிணியையனந்தாழ்வான்றமர்நடுங்க. (௪௧௨)

வேறு.

பெரும்பிணிசென்றுபிடித்தவனுடம்பைப்பேதமைசெய்தொருபுறத்தை
யருந்துயர்விளைத்தங்கரித்தெலும்பாக்கியழிப்பதையாவியோடதனிற்
பொருந்தியுமிறையுஞ்சலித்திலன்மகிழ்ச்சிபொங்கியசிந்தையனானான்
திருந்துமெய்ந்நிலையினிற்பவையரிதோவெளியதோசெப்புகதெரிந்தே. (௪௧௩)

அப்படிபிணியிலமருமந்நாளிலருட்டிருவேங்கடமுடையான்
ஒப்பிலாநிலையானிடத்தினிலொருநாளுற்றனக்கோங்கியகுணத்தாய்
தப்பறவிதனைத்தீர்க்கவோவுடம்பிற்சாற்றியதழும்புமில்லாமற்
செய்புதியிப்போதென்றனனென்றதிருமகள்கொழுநனைநோக்கி. (௪௧௪)

பொருவிலாநிலைசேர்மறையவனுரைக்கும்பொங்குமூவுலகுமுண்டுமிழ்ந்தாய்
ஒருபுறந்தந்தாயிதனினீசெய்யுமுதவியும்புலையனேற்குளதோ
கருமுகில்வண்ணாவேகுதியென்னக்கண்ணனுந்திரும்பியப்பொழுதே
திருமகளுரப்பவிலச்சையுற்றனனேயேகினான்றீர்ந்தவர்க்கெளியான். (௪௧௫)

ஆங்கவன்விடுத்தவரும்பிணியுடனேயகன்றதன்றனந்தன்மெய்த்திறத்தி
னோங்குசீர்நிலைகண்டுலகமுண்டவனும்பருமனந்தனிலுவந்தார்
தாங்கியவுடம்பிற்றழும்புமில்லாமைகண்டவர்தமர்களுமுவந்தார்
பாங்குறுகுரவன்பணித்தனதொழிலைப்பத்தனும்பண்டுபோற்பயின்றான். (௪௧௬)

துன்பிலாநிலையானவ்வணம்வாணாட்டொண்டனூர்நம்பியென்பவனும்
இன்புறுமடிசிலதிதியர்க்கினிதாயிராப்பகலளிப்பதிலொருநாள்

முன்புளவிதியால்வந்தொருதவசிமுடிவிலாப்பெரும்பசியுடையான்
அன்பினான்மிகுந்ததொண்டனூர்நம்பியமருமூரமர்பவரோடும். (௪௯௭)

வருந்தினேன்பசியாற்கஞ்சிகூழுளதேல்வாருமென்றொருவனைக்கேட்பத்
திரிந்துநின்றவனுந்தொண்டனூர்நம்பிதிருமனைவாசலைக்காட்டி
யரும்பசியுடையாயத்திருமனையிலமுதுசெய்கின்றனர்ததியர்
மருங்கினீநின்றங்கெம்பெருமானார்திருவடிசரணெனவாக்கால். (௪௯௮)

சொல்கனீகிடைக்குஞ்சோறெனநெஞ்சிற்றோன்றியம......யாலுரைப்ப
நல்லதென்றவனுந்தொண்டனூர்நம்பிநவையறுதிருமனைதன்னில்
எல்லையிறதியாமுதுசெய்பொழுதிலெழிற்றிருவாயிலின்புறத்திற்
கல்முதலுருகக்கழறினானெதிகடலைவனார்திருப்பெயர்கழற. (௪௯௯)

கேட்டனனதனைத்ததியர்மேன்மிகவுங்கிளர்ந்தபேரன்பினாலவரை
யூட்டுகின்றவனும்பொருக்கெனக்கபாடந்திறந்துவந்துற்றதைநோக்கி
நீட்டியசடையுங்கந்தையுமெய்யைநிறைத்தனசாம்பலும்பசியால்
வாட்டியமுகமுமுடையனாய்நின்றமதிமிகுந்தவசியைநோக்கி. (௫00)

தொண்டனூர்நம்பியெம்பெருமானாரென்றுநீசொல்வதென்னென்றான்
கொண்டவென்பசியைத்தீர்ப்பதன்பொருட்டாற்கூறினேனென்றனனதுகேட்
டண்டரின்முதியானோரிடத்திருத்தியருந்தவாருந்தியசேட
முண்டிதுகொள்கனீயெனக்கொடுத்தானுறுநெறித்ததியர்களதனை. (௫0௧)

நோக்கினீமேலோர்தளிகையிற்சேடநோன்பிலாத்தவசியும்புசித்தற்
காக்கினாய்பிழைத்தாயென்றுறச்சீறவாங்கவர்பூங்கழலிறைஞ்சிப்
பாக்கியத்தொண்டநம்பியும்பிழைத்தேன்பாவியேனதுபொறுத்திடுக
வாக்கினாலொருகாலெதிகணாயகனார்திருப்பெயருரைக்கின்மற்றதுவும். (௫0௨)

என்பெறுமதனையருள்கவென்றிசைத்தானெலையிலாமுதலிகளதுவும்
அன்புறுபரமபதம்பெறுமென்றாராசறுதொண்டனூர்நம்பி
துன்புறுதவசிக்கதுவொருபொழுதைச்சோறுதான்பெறாதுகொலென்றான்
இன்புறுநமதுமார்க்கமல்லானுக்கீவதுமுறையலவென்றார். (௫0௩)

அப்படிதர்க்கமிடுவதைப்புனிதமருந்தியதவசியுங்கேட்டங்
கொப்பிலாநம்பிதன்னொடுமுன்னையுத்தமரிகழலென்னென்றான்
செப்பினானம்பியுனக்கவர்தளிகைச்சேடமிட்டதன்பொருட்டென்னத்
தப்பறவின்றேநானுனக்காளாய்ச்சமைவனிங்கெனத்தலைசிரைத்து. (௫0௪)

கந்தையுஞ்சடையுங்கைவிடவெறிந்துகண்ணனுக்கடியனாய்நெறிசே
ரந்தமில்குணத்தான்றொண்டனூர்நம்பியாழிசங்களித்திடப்பெற்றின்

கெந்தைநீயடியேற்கொருகயிங்கரியமியம்புகசெய்யவென்றிசைத்தான்
பந்தமிறதியர்துய்த்தபின்தளிகைமாற்றலுன்பணியெனப்பகர்ந்தான். (௫0௫)

அப்படிசிலநாள்குருவுரைபேணியாசறவாழ்பவனிலைமைக்
கொப்புமூவுலகிலொருவருமின்மையானதையுடையவரறியச்
செப்பமார்நிலையான்வைகுநாளொருநாட்டிருவளர்வேங்கடப்பொருப்பிற்
றப்பறவுறையுமிறைவனைவணங்கச்சென்றனன்றன்னையேயனையான். (௫0௬)

வேறு.

ஆங்கிருந்துதிருமாலைசமைத்திறைவற்களித்தருளு
மோங்குநெறியநந்தாழ்வான்செய்திறத்தையுறநோக்கி
யேங்கியந்தோவநந்தாழ்வானிம்மலைமேலுறைவவெலாம்
பாங்குறுசீர்நித்தரெனப்பகர்ந்தனன்முன்கொல்விக்கோன். (௫0௭)

உரைமறந்தோவவரவர்களுகந்ததலத்திருப்பவரை
நிரைசேரப்பேர்த்தெடுத்துநீநினைந்தபடிவைப்பை
வீரைசேர்பூந்தார்க்காகவேரறுப்பைசலையறுப்பை
கரைசேர்க்குமிறைக்குவந்தகயிங்கரியமிதுவெனினும். (௫0௮)

பெரும்பழுதுகாணிவைகள்பேசுங்காலெனக்குநம்பி
திருந்தியசீர்ப்பாகவதர்திருத்தளிகைமாற்றுதொழி
லருந்தவமென்றருள்செய்தானுங்கவற்றினுவிலொன்று
பொருந்தியுனக்களிக்கின்றேன்வருதியெனப்போயினான். (௫0௯)

ஆங்கதுகேட்டநந்தாழ்வானுக்கையொடாருயிர்பதைப்ப
வேங்கியிதுதவிர்ந்தோமேலெதிராசனுரைமறுத்தோம்
பாங்கொடிதுசெய்தோமேற்பாகவ்தாபசாரந்
தாங்கினேமெனநின்றுசவிப்போடும்பணிசெய்தான். (௫௧0)

அப்படியேநிகழ்நாளிலாசறுசீருடையவரும்
செப்பரியதிருக்கோட்டிநம்பிமுன்புசெப்பியசீ
ரொப்பரியபெரியதிருமலைநம்பியெனுமுணர்வோன்
தப்பறமுன்னுறைவதுவும்வேங்கடப்பொற்சயிலத்தே. (௫௧௧)

படிமிசையில்வைகுந்தமெனமறைகள்பகர்வதுவும்
கடிபொழில்சூழ்வேங்கடப்பொற்கனகிரிதனையெனையா
ளடிகளிதுபரமபதமம்புவியோர்பற்றுமென
வடிவமருங்கரமலராற்காட்டியதுமற்றதுவாம். (௫௧௨)

தக்ககுருகைக்கோன்சரணந்தயங்குந்திருவைமுன்னிட்டுப்
புக்கவாறும்வேங்கடத்துட்புனிதனார்க்குக்கொல்லிக்கோன்
மக்கடேவர்பெருவாழ்வைமதியோமென்றுதிருமலைமேற்
றொக்கசாத்திலசாத்திலொன்றாய்ப்பிறக்கத்துணிந்ததுவும். (௫௧௩)

அத்தலத்திலவர்க்கன்றேவன்பரொடுநோம்புகுந்தவ்
வுத்தமமாந்திருமலையையுறவணங்கவேண்டுமெனச்
சித்தமுறநினைத்தழகார்பாகவதத்திரளோடுங்
கொத்தலர்ந்ததுழாயலங்கலரங்கர்கழல்குறித்திறைஞ்சி. (௫௧௪)

வேறு.

ஆங்கவனோடும்விடையருளடியேற்கமலநின்றிருமலைதன்னைப்
பாங்குடன்வணங்கிவரும்படியென்னப்பத்தியாற்பகர்தலுமதுகேட்
டோங்குசீரரங்கரவ்வணஞ்செய்கவுத்தமவென்றுரைத்தருளத்
தாங்கியமகிழ்ச்சிச்சுகோததியடைந்தான்றமரொடுவடதிசைநோக்கி. (௫௧௫)

எகினாரேகிப்பேரருளாளரிணையடிதிருவைமுன்னிட்டாங்
காகமுமனமுமாவியுங்கரையவாசறுமன்பினால்வணங்கி
மேகவான்கோலவடிவினாய்விடையென்றெழுந்தருள்வேதியர்துதிப்ப
மாகமார்கருணைவேங்கடப்பொருப்பைக்குறுகினார்வையகம்புகழ்வார். (௫௧௬)

சிறந்தசீர்மாறன்வந்தடிவணங்குந்திருமலைதனையெதிராச
னறந்திகழ்மனத்தால்நினைத்துவாக்காலேயாசறவழுத்திமற்றதனின்
புறம்புறம்வலஞ்செய்தன்பர்களோடுபொருவருந்திருப்பதிதன்னிற்
றுறந்தவர்துறவிற்பொருந்துமாழ்வரைச்சுருதியின்மொழிகொண்டுவணங்கி. ()

ஆசில்சீராழ்வார்திருமலைமீதிலடியிடற்கஞ்சியீண்டிருந்தார்
நீசனேன்காலோமிதிப்பதின்றந்தநிமலவெற்பினையெனமனத்திற்
கூசியாண்டிருந்துவேங்கடத்துறையுங்கொண்டலையன்பினாற்றொழுதார்
ஈசனார்க்கினியதம்பியாய்ப்பின்போயிராக்கதக்கருவறுத்திட்டார். (௫௧௮)

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.